# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-
வெளிநாட்டு சந்தா 30£. (15 U. S $). தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115 இதழ்: 1 6-1-1989 (ஜனவரி6-ஜனவரி13) பிரதி ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


### கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் செயலாளர் வண. பிதா கலாநிதி தயானந்தனின் வேண்டுகோள்:

# கிறிஸ்தவ பத்திரிகையாளர்கள் எப்பொழுதும் உண்மைக்கும் நீதிக்கும் போராட வேண்டும்

**கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் செயலாளரான வண. கலாநிதி தயானந்தன் பிரான்சிஸ் அக்டோபர் 18ஆம் திகதி தியான ஆச்சிரமத்தில் பத்து நாள் பயிற்சியொன்றை ஆரம்பித்து வைக்கும்போது குறிப்பிட்டார்.**

''கிறிஸ்தவ பத்திரிகையாளர் ஒருவர் எப்பொழுதும் சுறுசுறுப்பானவராகவும், தன்னை அர்ப்பணித்தவராகவும், நுண்ணுணர்வுடையவராகவும், இறைவாக்குரைப்பவராகவும் இருப்பதுடன் உண்மைக்கும் நீதிக்கும் போராட வேண்டும்'' என கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் செயலாளரான வண. கலாநிதி தயானந்தன் பிரான்ஸிஸ் அக்டோபர் 18-ம் திகதி தியான ஆச்சிரமத்தில் பத்துநாள் பயிற்சியொன்றை ஆரம்பித்து வைக்கும்போது குறிப்பிட்டார். இந்தியாவின் பல பாகங்களிலும் இருந்து இருபதைந்து இளம் பத்திரிகையாளர் கலந்து கொண்ட இப்பயிற்சியை இந்திய கத்தோலிக்க பத்திரிகையாளர் சங்கம் ஒழுங்கு செய்தது.

சிறந்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான பிதா பிரான்ஸிஸ் பல்வேறு வாழ்க்கைத் தரங்களையுடைய மக்களுக்கும் நற்செய்தியின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டுமென்று கூறிய அவர் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மெய்யான பத்திரிகையாளர் எனக் குறிப்பிட்டார். ஏனெனில் அவர்கள் இறை வனின் செய்தியை எழுத்து விளக்கவும் தமது எழுத்தின் மூலம் மக்களுக்கு அறைகூவல் விடுக்கவும் கூடிய துணிச்சல் உடையவர்கள்.

''கிறிஸ்தவ பத்திரிகையாளர்கள் புறவயமாகவும், புத்திபூர்வமாகவும், துல்லியமாகவும் தமது செய்தியறிக்கைகளை வெளியிட வேண்டும். அவர்களது எழுத்தில் ஓரளவு சமநிலை காணப்படவேண்டும்'' என வண. பிதா பிரான்ஸிஸ் கூறினார்.

## சிறந்த வேதாகம நாடகம்

கேரள ஆயர் பேரவையின் சமூகத் தொடர்பு ஆணைக்குழு நடத்திய போட்டியொன்றில் ''வசனம், திருவசனம்'' என்னும் நாடகம் சிறந்த வேதாகம நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஆணைக்குழுவின் உபதலைவரான தாமரசேரி ஆயர் செபஸ்தியன் அவர்களால் அக்டோபர் 30-ம் திகதி அதற்கு ரூபா 5000- பரிசாக வழங்கப்பட்டது. ''சம்பூர்ண வேதாகமம்'' ''சொதோம் கொமோரு'' என்னும் நாடகங்களும் தெரிவு செய்யப்பட்டன. புதுமையான அமைப்புக்காக சம்பூர்ண வேதாகமத்துக்கு ஒரு விசேட பரிசு வழங்கப்பட்டது.

## இந்தியாவில் 160 மொழிகளிலேயே நற்செய்தி

இந்தியாவின் 370 பிரதான மொழிகளுள் (அதாவது 5000த்துக்கு அதிகமானோரால் பேசப்படுவது) 160 மொழிகளிலேயே நற்செய்தி நூல்கள் உள்ளன.

39 மொழிகளில் வேதாகமமும், 31 மொழிகளில் புதிய ஏற்பாடும், 90 மொழிகளில் நற்செய்திகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவில் 1652 மொழிகள் உள்ளன.

இந்திய நற்செய்தி மறைப் பணி நிலையம் ஆதிவாசிகளின் மொழிகளான லம்பாடா, கோய், துர்வா, பைசன் ஹோரண், மதியா, கோர்க்கு கராசியா, கார்வாவி ஆகிய பாஷைகளில் வேதாகமத்தில் சில பாகங்களை மொழிப் பெயர்த்துள்ளது.

கலாசாரத் தொடர்பு நிறுவனத்தின் இயக்குநரான பிதா இம்மானுவல் கிறிஸ்டியன் இறைவனைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பதற்கு மொழி பெயர்ப்பு செய்யக் கூடிய பல பணியாட்கள் தேவைப்படுகின்றனர் என்றும் கூறுகிறார்.

## டொன்பொஸ்கோவுக்கு தபால் முத்திரை

புனித டொன் பொஸ்கோவின் மரணத்தின் நூறாவது ஆண்டு ஞாபகார்த்தமாக தபால் முத்திரையொன்றை வெளியிடுவதென இந்திய தபாலமைச்சு தீர்மானித்துள்ளது. ஆசிரியரும் இளைஞரின் நண்பருமான இப்புனிதரின் நூற்றாண்டு நிறைவு உலகெங்கும் இவ்வாண்டு கொண்டாடப்படுகிறது.

டொன் பொஸ்கோவின் சலேசிய சபையினரும் பிறரும், முக்கியமாக வடகிழக்கு இந்தியாவிலுள்ள சலேசிய நிறுவனங்களின் பழைய மாணவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கியே அரசு இம்முத்திரையை வெளியிடத் தீர்மானித்தது. இம்முத்திரை 1989 ஜனவரி 31இல் ஷில்லாங்கில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குருத்துவ வெண்பொன் யூபிலி விழா

**21-12-1963 — 21-12-1988**



பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்



குருத்துவ வெண்பொன் யூபிலி விழாக்காணும் மன்னார் மறைவட்ட மேதகு ஆயர் அவர்களுக்கும், யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருமட முன்னாள் உப அதிபர் அருள்திரு. J. E. ஜெயசீலன் அடிகளாருக்கும் ''பாதுகாவலன்'' வாசக நேயர்கள் சார்பாக யூபிலி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் இவர்களுக்கு நீடிய ஆயுளையும் ஆன்ம-சரீர நலன்களையும் நிறைவாக வழங்கி இவர்களது தொண்டு சிறக்க அருள்பாலிக்க வேண்டுமென இறைஞ்சுகின்றோம். (ஆ—ர்)

## கத். வாழ்வுச் சமூகங்களின் அகிலஇந்திய ஒன்றுகூடல்

கத்தோலிக்க வாழ்வுச் சமூகங்களின் அகில இந்திய ஒன்றுகூடல் அக்டோபர் 4ஆம் திகதி திருச்சூருக்கு அண்மையிலுள்ள செய்யாரம் என்னுமிடத்தில் நடைபெற்றது. இதனை ஆரம்பித்து வைத்த எர்ணாகுளம் பேராயர் கருதினால் அந்தோனி படியாரா கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தம் வாழ்வில் வளர்த்து நற்செய்தியின் அன்பான்மையை உள்ளத்தில் கொள்ள வேண்டுமென்று பங்குபற்றியோருக்கு அறிவுரை கூறினார்.

ஒன்றுகூடலின் இறுதி நாளான அக்டோபர் 12ஆம் திகதி இறுதியுரை ஆற்றிய ஆயர் பேரவைத் தலைவரான பேராயர் பெனடிக்ற் மார் கிறகோறியஸ் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கமைய வாழ்வில்லாத துறைகளிலும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமெனக் கூறினார். ''நாம் எங்கும் சீரழிவுகளைக் காண்கிறோம்—குடும்ப உறவுகள் சீர்குலைந்துள்ளன. பொருளாதாரத்துறையில் ஊழல் மிகுந்துள்ளது, அரசியலில் தன்னலமும் அநீதியும் நிறைந்துள்ளன. இந்நிலையில் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் கிறிஸ்தவ கோட்பாடுகள் அனுசரிக்கப்பட வேண்டும்'' என்று அவர் மேலும் கூறினார்.

திருச்சூர் ஆயர் ஜோசவ் குண்டுகுளம் ஒன்றுகூடுதலுக்குத் தலைமை வகித்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினார். நாட்டின் பல பாகங்களிலுமிருந்து 100 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த ஒன்றுகூடலில் மரியாயின் பேரணி ஒரு சிறப்பம்சமாக அமைந்தது.

## உள்ளே – கலைநிலா

திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

# நமக்கு இது-நம்பிக்கை ஆண்டு

ஜனவரி பிறந்துவிட்டது. புதிய ஆண்டின் ஜனனம் நிகழ்ந்துவிட்டது. மீண்டும் ஒரு புதிய ஆண்டில் அடியெடுத்துவைத்துவிட்டோம். கடந்த ஆண்டை எண்ணிப்பார்க்கையில் மனதுள் ஏற்படக்கூடிய கவலைகளும் வெறுப்புக்களும் தீய கனவுகள்போல மனத்திரையில் நின்றாலும் புதிய ஆண்டு ஒரு புதுவாழ்வைக்கொண்டு வரும்என்ற நம்பிக்கை எதிர்பார்ப்புக்களுடன் மலர்ந்திருக்கின்றது.

புதிய வாழ்வு கொடுக்கப் புத்திரன் ஒருவர் பிறந்துள்ளார் என்பதை அறிந்து—ஒளிகாட்டிய வழியில் வந்த மூவரசர் திருவிழாவை ஜனவரி 6ம் நாளில் நாம் கொண்டாடுகிறோம். ஆண்டாண்டு காலமாய் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடிவின் நாயகனை, அந்த விடுதலை நாயகனை, அவர்கள் நம்பிக்கையோடு தேடி வந்தார்கள் அவர்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. வந்தார்கள்- கண்டார்கள்-மீண்டார்கள்.

சென்ற ஆண்டின் தொடக்கத்தில் இருந்தது போன்ற நிலைமையில் இந்த ஆண்டில் நாடோ, நாட்டு மக்களோ இன்று இல்லை. 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்பதுபோல ஜனவரியில் ஜனநாயகம் பிறக்கும் என்ற எதிர்பார்ப்பும் எம்மவரில் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவ மாற்றங்கள்கூட அதனைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றன.

வறுமை ஒழிக்கப்பட்டுவிடும்?
பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைக்கப்படும்?
ஆதிக்க சக்திகள் அகற்றப்படும்?

என்பன போன்ற எதிர்பார்ப்புகள் இந்த ஆண்டு ஒளிமயமான வாழ்வுக்கு வழிகோலும் என்ற நம்பிக்கையை யூட்டுகின்றன. எம்மவர்களின் இந்த நம்பிக்கைகள் நனவாகவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

ஒவ்வொரு புதிய ஆண்டின் தொடக்கத்திலும், அவ்வாண்டுக்குரிய தீர்மானங்கள், சபதங்களை எடுத்துக்கொள்வது பலருக்கு உள்ள வழக்கம். ஆனால் அந்த ஆண்டின் முடிவில் அவை எந்த அளவுக்கு நடைமுறை சாத்தியமாகியிருக்கின்றது என மீளாய்வு செய்து நோக்கில் பெரும்பாலும் விடை பூஜ்யமாகவே அமைந்து விடுவதுண்டு. அப்படியான 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதான தீர்மானங்களாக அல்லாது இலட்சிய பூர்வமான தனக்கும், மற்றவனுக்கும் நன்மை தரக்கூடிய தீர்மானங்களை இப்புதிய ஆண்டில் மேற்கொள்வோம். அவை-

மனித மாண்பை மதிப்பனவாக-
மனித உயிரின் பெருமதியை மதிப்பனவாக-
சமூக, சமுதாய ஏற்றத்தாழ்வுகளைத்
தகர்ப்பனவாக-

எமக்குள்ள பொறுப்புகள், கடமைகள், பங்களிப்புகளை நிறைவேற்றத் தயங்காதனவாக இருக்கட்டும்.

ஆண்டொன்றின் தொடக்கமும் முடிவும் வெறுமனே கால ஓட்டத்தின் நிகழ்வுகள் என்று ஆகாமல் இந்த ஆண்டு எமது வாழ்க்கையில் உரிமை, விடுதலை வாழ்வைக் கொண்டுவரும் நம்பிக்கையாண்டாக மலர்கின்றது. இவ்வாண்டின் பிற்பகுதியில் எம்மை நாம் மீளாய்வு செய்யும்போது ஒரு பொற்காலத்தில் புகுந்து விட்டோம் என்ற பூரிப்பு எமக்குக் கிட்டட்டும்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தேனருவி:

இயேசுவின் திருமுழுக்கு விழா (08.01.89)

# எத்தனையல்ல, எப்படி என்பதே

உரிமை என்றால் ஓடி வரும் பலரும், கடமை என்றால் ஒழிந்து கொள்ளுகிறார்கள். நிவாரணமும், பொருள் வீடு, கல்வி போன்றவை இலவசம், திருமுழுக்கே அதற்கு ஒரு நிபந்தனை யென்றால் இன்னும் பல்லாயிரக்கணக்கானோரை மனம்மாற்றலாம். அதாவது மதம் மாற்றலாம். திரு முழுக்குப் பெற்றவரும் கூடத் தம் பெயரைப் பட்டியலில் மீண்டும் இணைக்கத் தயங்க மாட்டார்கள்.

'திருமுழுக்கு எத்தனை' என்ற கேள்வி தற்போது திருச்சபையில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல அது ''எப்படிப்பட்டது'' என்பதுதான் கேள்வி. திருமுழுக்குவாழ்வின் தரத்தை உராய்ந்து அதன் தகமையை உறுதி செய்ய விரும்புகிறாள் தாய்த்திருச்சபை

திருமுழுக்குக் கொடுக்காவிடில், பிள்ளை தற்சமயம் இறந்துவிட்டால் நரகம்தான் அதன் கதியாகும். என்ற அச்சம் சிலருக்குண்டு இன்னும் பலருக்கு ஏதோ ஒரு சம்பிரதாய, அதை ஒட்டிய ஒரு கொண்டாட்டம். இவை நடைபெறாவிட்டால் குடும்பக் கௌரவம் என்னாகிவிடும் என்ற பிரச்சனை. இன்னும் சிலருக்குத் திருமணத்தின் ஒரு நிபந்தனையே திருமுழுக்கு. இதனால் புனிதமான திருமுழுக்கு நிகழ்வு அர்த்தம் இழந்த சடங்காகவோ அல்லது ஒரு குறுக்கு வழியாகவோ இருப்பதுவருந்துதற்குரிய விடயமாகும்.

மனமாற்றத்திற்கு ஒரு வெளி அடையாளமாக மட்டும் இருந்த திருமுழுக்கு அருளப்பரின் ஞானஸ்நானம் கிறிஸ்து பெற்ற திருமுழுக்குடன் முற்றுப்புள்ளி பெற்றது. கிறிஸ்துவின் திருமுழுக்கு உண்மையில் தூயஆவியின் திருமுழுக்கு. இறைவனால் அழைக்கப்பட்டு, இலட்சியத்தை நிறைவு செய்ய அனுப்பப்பட்டவரிலேயே தூயஆவி பொழியப்படுவது மரபு.

இறைவாக்கினர், அரசர், குருக்கள் போன்றோரின் அழைப்பிலும், அனுப்பப்படுதலிலும் தூய ஆவிபொழியப் படுவதைக் காணலாம். எனவே கிறிஸ்துவுக்குத் திருமுழுக்கு ஓர் அழைப்பு, ஓர் அர்ப்பணம், ஒரு பணி, ஒரு பயணம்.

அவரது திருமுழுக்கின்போது எதிரொலித்த குரலொலி அவரது பயணப் பாதையைத் தெளிவு படுத்துகிறது.

''நீரே என் அன்பார்ந்த மகன் உம்மிடம் நான் பூரிப்பு அடைகிறேன்.'' இவ்விரு வாக்கியமும் முறையே—இஸ்ராயேலின் அரசன் ஒருவரின் முடிசூட்டு விழாவிலும் (சங். 2/7) துன்புறும் ஊழியன் இசையாஸ் பற்றியும் (இசை.41/1) கூறப்பட்டவை. அதாவது கிறிஸ்து தமது அரசின் மாட்சிமையைத் துன்புறும் ஊழியனுக பாடுகள், மரணம் வழியாகப் பெறவேண்டும் என்பதே.

யோர்தானில் ஆரம்பமான பயணம் கல்வாரியில் நிறைவு பெறுகிறது. கிறிஸ்துவின் திருமுழுக்கு ஒரு நிகழ்ச்சியல்ல மாறாக ஒரு வாழ்வு.

திருமுழுக்கின் உரிமையைப் பெற விரும்பும் நாம் அந்த அழைப்பின் கடமைகளைத் தட்டிக் கழிப்பது அதன் புனிதத் தன்மையைக் களங்கப் படுத்துவதாகவே இருக்கிறது. ஆவியை அணைத்துவிட்டு, ஆவியின் அருங்கொடைகளை வீணாக்கிச் சடங்குகள் என்ற தண்ணீரில் ஸ்நானம் செய்து மனம் குளிருகிறோமே. ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்ட கிறிஸ்து தமது குருதியால் திருமுழுக்கைப் புனிதப் படுத்துகிறார்.

நாம் பெற்ற திருமுழுக்கின் நிலை என்ன?

சுவாமி ஜீவா போல் அ. ம. தி

இசை. 42: 1-7 அறத்தை நிலைநாட்ட அழைத்தோம்
அப். பணி. 10: 34-38 ஆவியை அளித்து அபிஷேகம் செய்தார்
லூக். 3: 15-22 அன்பார்ந்த மகன். உம்மிடம் பூரிப்படைகிறேன்

ஆண்டவரின்

## திருக்காட்சி விழா

ஆண்டவரின் திருக்காட்சி விழா — 6.1.89 வெள்ளிக்கிழமை— கடன்திருநாளாகும். இது4-ம்பக்கத்தில் தவறுதலாக 7.1.89 எனப் பிரசுரிக்கப் பட்டுள்ளது. தவறுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)

# கலை நிலா - கலை நிலா - கலை நிலா

**கலைஞர் ஒன்றுகூடல் :**

திருமறைக் கலாமன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்த ''கலைஞர் ஒன்றுகூடல்'' நிகழ்ச்சி கடந்த 22-12-1988 வியாழக்கிழமை நடைபெற்றது. மன்ற இயக்குனர் அருள் திரு நீ. மரியசேவியர் அடிகள் அவர்கள் கீழைத்தேய கலாச்சாரங்கள் பிரதிபலிக்கும் வகையில் யாழ். அருள் ஆச்சிரமத்தில் நிறைவேற்றிய திருப்பலிப் பூசை நமது பாரம்பரிய வழிபாட்டு முறையில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்துமென்றே சொல்லவேண்டும். நமது மரபு வழி வாத்தியங்கள் எழுப்பிய இனிமையான ஒலிப் பின்னணியில் இசைக்கப்பட்ட பஜனை வழிபாடு, நம் உடலையும் உள்ளத்தையும் ஒருமுகப்படுத்தி இறைவனை வணங்கி வாழ்த்தக் கூடிய ஓர் ரம்மியமான சூழலை உருவாக்கித் தந்தது என்றால் அது மிகையாகாது. குரவரும், கலைஞர்களும் பங்கு கொண்ட திருப்பலி, உண்மையிலேயே ஒரு தனித்துவம் நிறைந்ததுதான். ஒன்றரை மணிநேரம் ஓடியவிதமே தெரியவில்லை. உடலும் உள்ளமும் நிறைவுபெற்ற ஓர் ஆத்மார்த்த உணர்வு ஏற்பட்டது.

திருப்பலி வழிபாட்டின் பின்பு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற மதிய விருந்தில் கலந்துகொண்ட கலைஞர்கள் கருத்துப் பரிமாற்றங்கள் செய்துகொண்டபோது அவர்களுக்குள் நெருக்கமான பிணைப்பொன்று உருவானதை உணரக்கூடியதாய் இருந்தது. பிரதி மாதமும் பௌர்ணமி தினத்தில் (போயா) இதுபோன்ற கலைஞர் ஒன்றுகூடலை நிகழ்த்துவதென முடிவு செய்யப்பட்டது.

வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன்

★

**''திருமகனே தாலேலோ''**

பல கிளைநதிகள் இணைந்து ஒரு பெருநதி ஆவதுபோல் கலையின் பல வடிவங்களின் ஒன்றிணைப்பே திருமறைக் கலாமன்றம். அக்கலை வடிவங்களில் ஒன்றான வெளியீட்டுப் பகுதியின் ஊடாகக் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதைக் கடமையாக மன்றம் கொண்டுள்ளது. அக்கடமை உணர்ச்சியின் வெளிப்பாடே, ''திருமகனே தாலேலோ.''

'திருமகனே தாலேலோ' கடந்த 22-12-88 வியாழக்கிழமை பி. ப. 4-15 மணிக்கு மிகவும் எளிமையாக வெளியிடப்பட்டது. மலரின் வெளியீட்டை மின்சாரத்தடை பெரிதும் பாதித்த பொழுதிலும் இறைவனின் துணையோடும், அச்சகத்தாரின் உதவியோடும் பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிட்டுள்ளோம். மலரின்

★

அட்டைப்படம் மிகவும் கருத்தாழம் மிக்கது. விடுதலையையும் மீட்பையும் பலாத்காரத்தினாலும் வன்முறையினாலும் அல்ல 'அன்பினால்' பட்டும் பெறலாம் என வலியுறுத்துவதோடு உலகிற்கு அமைதியையும் மீட்பையும் கொடுக்கவே கிறிஸ்து மனுவானார் என்பதனை மிகவும் துல்லியமாக சகல தரப்பினரும் புரிந்துகொள்ளக் கூடிய விதத்தில் அட்டைப் படம் எடுத்துக் காட்டுகின்றது. அட்டையைத் திறந்ததும் முதலில் நமது இயக்குனரின் ''பிறந்தநாள் விழா'' அழைப்பைக் காணலாம். அதில் அவர் உங்களைக் கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்கு அழைப்பதோடு பரம குழந்தைக்கு அன்பளிப்பு வழங்குவதற்கு எதைக் கொண்டுவருதல் வேண்டுமென ஆணித்தரமாக கோடிட்டுக் காட்டுகின்றார்.

★

மலரில் தொடர்ந்து இடம் பெறும் விடயங்கள் இறைமகன் இயேசுக்கிறிஸ்து விரும்பும் உள்ளக் கமலத்தை மக்கள் உள்ளங்களில் உருவாக்கும் சிந்தனைகள் என்றே கூறலாம். வீரமாமுனிவரின் தேம்பாவணி இலக்கியப் பாடல்களில் சில தமிழ்க் கலாசாரக் கண்ணோட்டத்துடன் சிறப்பிட்ட கிறிஸ்து பிறப்பு பற்றிய படங்களுடன் இணைத்து வெளியிடப் பட்டுள்ளது. தேம்பாவணி பற்றி அறியாதவர்கள் அறியவும் அதனைப் படிக்கும் ஆவலைத் தூண்டவும் இது உதவும் என எதிர்பார்க்கின்றோம். இம்மலரில் இடம்பெற்றுள்ள கவர்ச்சி மிகு வெளிப்பாடு இதுவென நம்புகின்றோம் மற்றைய விடயங்கள் இறைமகன் யேசுக் கிறிஸ்துவை வாழ்த்தி வணங்கும் பாமாலைகளாகவும் அவரின் வருகைக்கான உளமாற்

(தொடர்ச்சி 7 ஆம்பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

### ஊறணிப்பங்கில்
# திரு இருதய இறைபணிச் சபையினரின் விழா

20-11-88 ஞாயிறன்று எமது பங்கில் கிறிஸ்து அரசரின் விழாவை திரு இருதய இறைபணிச் சபையினர் சிறப்பாகக் கொண்டாடினர். காலையில் பங்குத்தந்தை அருள் திரு ஆர். ஸ்ரலின், அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மதியம் திரு இருதய இறைபணிச் சபையினரும். ஏனைய இறைபணிச் சபைகளின் நிருவாகஸ்தர்களுமாக 50 க்கும் மேற்பட்டவர்கள் பங்கு மனையில் ஒன்று கூடினார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் இறைபதமடைந்த பேராயர் கருதினல் தோமஸ் பெஞ்சமின் கூறே அவர்கட்காக இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன் பின் பங்குத்தந்தை தமது தலைமையுரையில் சமூகம் ஒன்றுபட்டு வாழ வேண்டுமானல் ஒருவருக்கொருவர் செவிமடுத்து, இணைந்து அன்பு செய்து வாழ்ந்தால்தான் உண்மையான கிறிஸ்துவ சூழல் உருவாகும். எனவே இறை பணிச் சபைகளிலுள்ளவர்கள் முதற்கண் தமது வாழ்க்கையின் மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாகவிளங்க வேண்டுமெனவும், போதனையிலும் சாதனையே சிறந்ததெனவும் கூறினார். தலைவர் உரையின் பின்பு மதிய போசனம் வழங்கப்பட்டது

அங்கத்தவர் கருத்துத் தெரிவிக்கும் பொழுது எமது பங்குக்கு நிரந்தரமாக, ஒரு குருவானவர் நியமிக்கப்பட வேண்டுமென்ற பங்கு மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றிவைத்த ஆயர் அவர்கட்கு நன்றி தெரிவித்தார்

"துடிப்பும், உற்சாகமுமுள்ள குரவர் அருள்தந்தை ஆர். ஸ்ரலின் அவர்கள் எமது சமூகத்துக்கும் குறிப்பாக இளம் சந்ததியினர்க்கும் சிறந்த வழி காட்டியாவார்" என்றார்

கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. அ. அருளானந்தம் உரையாற்றும்பொழுது அன்பு முதலில் குடும்பத்திலும் அயலவர்களிடத்திலும், சமூகத்திலும் சமுதாயத்திலும், ஒளியாய் மிளிரவேண்டும் என்றார். மேலும் பலர் உரையாற்றினர்.

ஈற்றில் திருஇருதய இறை பணிச் சபைத்தலைவர் உரையாற்றுகையில் "இவ்விழாவிற்கு பெருந்தொகையினர் வருகைதந்தமை பங்கு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டதற்கு அருஞ்சான்றாகும்" என்றார்

நிகழ்ச்சிகள் இறைவணக்கத்துடன் இனிதே முடிவுற்றது.

வ. அ. இம்மனுவேல்
ஊறணி, காங்கேசன்துறை

# பருத்தித்துறையில் ஒளிவிழா

கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டிய ஒளிவிழா பருத்தித்துறை புனித தோமையார் றோ. க. பெண்கள் பாடசாலை மாணவியரால் சென்ற மாதம் 2ம் திகதி மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது. தீபமேற்றலுடனும், இறைவணக்கத்துடனும் ஒளி விழா ஆரம்பமாகியது.

முதலில் பாடசாலை அதிபர் அருட்செல்வி நசரேத் தலைமையுரையினை நிகழ்த்தினார். பின் மறையாசிரியர் திரு. இ. ம. ஜெயசீலனின் சிறப்புரை இடம்பெற்றது அதனைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பங்குத் தந்தை அருள்திரு. T. J. கிருபாகரன் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து கிறிஸ்துவின் பிறப்பு விழாவையொட்டிய கலைநிகழ்ச்சிகள் பாடசாலை மாணவிகளால் அளிக்கப்பட்டன மாணவியரால் இசைக்கப்பட்ட கிறிஸ்மஸ் கீதங்களும், மற்றும் நாடகங்களும், சிறப்பானதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாக நன்றிப்பாடலுடன், ஒளி விழா நிகழ்ச்சிகள் யாவும் இனிதே முடிவுற்றன.

அ. மோசேஸ்.

# கிளியன்குடியிருப்பு புனித சவேரியார் திருவிழா

பேசாலை துணைப்பங்கு, கிளியன்குடியிருப்பு புனித சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த 03-12-1988-ல் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது இத்திருவிழாவை முன்னிட்டு திரிதின வழிபாடுகள் நடைபெற்றன. மறையுரைகளை பங்குத்தந்தை அருள்திரு ஜே.பி தேவராஜா அடிகளார் வழங்கினார் பங்குத்தந்தை தமது மறையுரையில், புனித சவேரியார் பரிவுறு பாசம் கொண்டவர். அந்தப் பாசத்தின் நிமித்தமே அவர் இந்தியாவிலிருந்து தலைமன்னார் ஊடாக அதுவு உங்கள் ஆலயத்தின் முன்னால் அமைந்திருக்கும் வீதி வழியாகவே வந்தார், இதனால் நீங்கள் அனைவரும் புனித சவேரியாரின் வழித்தோன்றல்கள் என்றும், அவர் வாழ்ந்த வாழ்வை நீங்கள் அனைவரும் கடைப்பிடித்து அவ்வாறே வாழ வேண்டும்" எனவும் கேட்டுக் கொண்டார்."

தகவல், சந்திரா. மிராண்டா

# மன்னார் விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகம்

மன்னார் மாவட்டம் ஒரு விவசாய பிரதேசம். இதில் 68% வீதமானோர் நெற்செய்கையை தமது பிரதான தொழிலாக மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்படும்போது துயர் துடைப்பு சங்கம் குறிப்பறிந்து நேரகாலத்துடன் 4000 விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு தேவையான விதைநெல், அடிஉரம், மேற்கட்டுஉரம் போன்றவற்றை ஒருபோதும் இல்லாதவாறு நேரகாலத்துடன் விவசாயிகளை தேடித்தருவது ஓர் அரிய முயற்சியாகும். இச்சங்கத்தின் கட்டுக்கோப்பான சேவையை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இப்படியாக கிடைக்கும்உதவிகளை துர்ப்பிரயோகம் செய்யாது விவசாயிகள் பாவிக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை விவசாயிகள் 600 பேருக்கு விதை நெல், உரம் போன்றவற்றை வினியோகிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர், திரு. என். தர்மபாலன் கருத்து தெரிவித்தார்.

இச்சங்கத்தில் செயளாலர், திரு. சிங்கிலேயர் பீற்றர் தலைமையில் சங்க ஊழியர்கள் மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை நிலையத்தில் உள்ள 4000 விவசாயிகளுக்கு துரிதகதியில் விதைநெல் உரம் போன்றவற்றை வினியோகித்துவருகின்றனர்.

மேலும் இக்கால போகத்தில் மேட்டுநிலச் செய்கையில் ஈடுபட்டு இருக்கும் பாதிக்கப்பட்ட குறிப்பாக இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய விவசாயிகளுக்கு பழமரக்கன்றுகள், மிளகாய், உரம் போன்றவற்றை சிறுவர் பராமரிப்பு நிதியம், கெயார் ஸ்தாபனம் போன்றவற்றின் உதவியுடன் விநியோகித்து வருவதுடன் கமக்காரர் பயிற்சி வகுப்புகளையும் விவசாய இலாகா உத்தியோகஸ்தர் உதவியுடன் நடாத்தி வருகின்றனர்.

தகவல்:- சின்கிளேயர் பீற்றர்.

### பரந்தன் இந்து தமிழ் மகாவித்தியாலயத்தில்
# நடைபெற்ற ஒளிவிழா

பரந்தன் மகாவித்தியாலயத்தில் 30-11-88 புதன் கிழமை அன்று 9. 30 மணியளவில் ஒளிவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பரந்தன் பங்குத் தந்தை ஓம்லோ அடிகள் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி உதவிப்பங்குத் தந்தையான சூசைநாதர் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் வருகை தந்திருந்தனர். மறையாசிரியரான செல்வி ஞானமலர் தீப ஒளி ஏற்றி கிறிஸ்துவின் பிறப்பை வேதாகம நூலிலிருந்து எடுத்தியம்பினார். பின்னர் மதிப்புக்குரிய அதிபர் திரு. பத்மநாதன் அவர்களால் வரவேற்புரை வழங்கப்பட்டது. பின்னர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. கிறிஸ்மஸ் பாடல்கள் நாடகங்கள், கவிதைகள் என்பன இடம்பெற்றன. இதில் கலந்து கொண்ட இந்து மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வமாகப் பங்குபற்றினார்கள். கிறிஸ்தவமாணவர்கள் குறைவாக இருந்தாலும் எமது அதிபர் நிறைவாக உதவி அளித்து எம்மையெல்லாம் மகிழ்வித்தார்.

பின்னர் ஓம்லோ அடிகளாரும், சூசைநாதர் அடிகளாரும் கிறிஸ்துவின் பிறப்புப் பற்றி சிறப்புரை வழங்கினர். இறுதியில் திருமதி . பசுபதி ஆசிரியை நன்றியுரை வழங்கினார். 12. 45 மணியளவில் ஒளி விழா இனிதே நிறைவேறியது

கிளி/ பரந்தன். இ. த. மகா வித்தியாலய, மாணவர்கள்

# நெடுநகரில் புனித பிரான்சிஸ்கு சவேரியார் திருவிழா

'இறைவன் என்னை அன்பு செய்கின்றார்' அவர் வழிநடந்து இறைபணி போதிப்பதே என் பணியென இறைசித்தத்தைச் சிரம்மேற்கொண்டு சத்திய வேதத்தைத் தரணியெங்கும், போதித்து தன் உடலை இன்றும் எமக்கு தரிசிக்கத் தந்து புனிதராகிய பிரான்சீஸ்கு சவேரியார் திருவிழா, பசுந்தீவாம் நெடுந்தீவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

24-11-88 (வியாழன்) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பது நாட்கள் தொடர்ந்துநடந்தன. வழிபாடுகளை பங்குத்தந்தைஅருள்திரு. M. M. V. அமிர்தகுமார் நடத்தினார். தேசம் தேசமாகச் சென்று வேதம் போதித்த புனிதர் கடல் மார்க்கமாக மன்னாருக்கு புறப்பட்ட வேளை திசைமாறி நெடுந்தீவுக் கரையில் இறங்கியதாக சரித்திரங்கள் கூறுகின்றன. அவர் பாதம் பதிந்த இடத்தில் கோயில் கொண்டெழுந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதி நாளான 3 - 12 - 88 காலை பெருநாள் பூசைப்பலியை ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை M. M. V. அமிர்தகுமார் தம் மறையுரையில் உண்மைக் கிறிஸ்துவுக்காக அரும் சேவைகள் பல புரிந்து பூவுடலை பூமியில் விட்டுப்பாரெல்லாம் பரமனின் திருநாமம் பாடவைத்தவர் புனித பிரான்சீஸ்கு சவேரியார் என உரை பகர்ந்தார். சுரூப ஆசீர்வாதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

நெடுநகர் நேசன்.

# நாங்களும் கிறிஸ்தவர்கள்

ஞாயிறு திருப்பலியைத் தவறவிடோம்
நாலுபேர்பற்றி நாவினிக்கக் கதைபுனைவோம்.
முதற் செவ்வாய் அதனிற்கு முந்திடுவோம்,
முன்னாலே வந்துவிடும் அந்தோனியை.
முறைத்தொருக்கால் பார்த்திடுவோம் ஆலயத்தில்-
விட்டு விடுவோமோ புதன்கிழமை,
வீடு தேடிப் பிச்சை கேட்கும் சூசைக்கு,
நாயதனை ஏவிடுவோம் 'சூய்' என்று.
முதல் வெள்ளிக்கிழமைக்கு முந்திடுவோம்,
முன் வீட்டு முத்தம்மா கள்ளியென்று,
தவறாது தீர்ப்பிடுவோம் தவறாகத்தானே.
சனிக்கிழமை அனுசரிக்கச் சளைத்திடமாட்டோம்,
மேரியவள் திருவிருந்து அருந்திவரும் போது,
சனியனெனச் சபித்திடுவோம் சத்தமின்றி — ஏன்?
நாங்களும் கிறிஸ்தவர்கள் — சிற்சில கிழமைகளில்.

— வே. சாமுவேல்
தெல்லிப்பளை

# புனித வெற்றிநாயகியின் ஆலயவிழா

கடல் அலைகள் தாளம் போட்டு கவிகள் பல பாடும் பேசாலை புனித வெற்றிநாயகியின் ஆலயத் திருவிழா கடந்த 08.12.1988-ல் பேசாலைப் பங்கில் பங்குத் தந்தை அருள் திரு. ஜே. பி. தேவராஜா அடிகளின் தலைமையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவையிட்டு நவதின வழிபாடுகள் இடம்பெற்றன. மறையுரைகளை அருள் தந்தை பிலிப் ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் ஆற்றினார். விழாவின் எட்டாம் நாள் பங்கிலுள்ள 100க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு முதல் நன்மை வழங்கும் சடங்கு நடைபெற்றது. அதே தினம் நற்கருணை நாதரின் பவனியை அருள்திரு எஸ். ஜெயபாலன் குருஸ் நடாத்தினார். இறுதித் தினத்தன்று இறுதி ஆராதனையுடன் புனித வெற்றிநாயகியின் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றது. முடிவில் பங்குத் தந்தையால் திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது. திருவிழா தினத்தன்று மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் அவர்களின் தலைமையில் பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தை அருள்திரு ஞானுதிக்கம், ஞானஒடுக்க போதகர் ஆகியோருடன் கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது. ஆயர் அவர்கள் தனது மறையுரையில் "சேற்றில் மலர் செந்தாமரை பூசைக்குகந்த மலராக வந்ததைப் போல மரியன்னை தனது வாழ்க்கையின் மாட்சியால் விண்ணுலகில் வாழும் வேந்தனின் தாயாராகத் திகழும் வரத்தைப் பெற்றார்" என மரியன்னையின் சிறப்பை எடுத்தியம்பினார். இறுதியில் பூசை முடிவில் ஆசிரியர் திரு. ஞா. அந்தோனி பச்சேக் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அறியாமை அறிமுகம்

சிறுகதை

''நான் என்ன பிழை செய்தன்? ஏன் இப்படி எனக்கொரு சோதனை'' மனம் அல்லாட அழுது சிவந்த முகத்துடன் நடக்கின்றான் சுந்தரேசன். சற்று நேரத்திற்கு முன் சந்தோஷமாக இருந்த முகம் ஒரு நொடியில் எப்படி மாறி விட்டது?

''நண்பனும் நண்பன். ஒரு நண்பனுக்குக் கிடைக்கும் மரியாதை இதுதானாக்கும், நான் செய்ததற்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும், என்னமாதிரி இருந்தவன்? எப்படி மாறிவிட்டான்? சீ எல்லாம் போலி. எல்லாரையும் நம்பக் கூடாது.

''ராகவன்...எவ்வளவு இனிமையான பெயர் இவனுக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருந்தேனே! நான் அன்பு வைக்கும் அளவுக்கு என்னைப் புரிந்து கொள்ள யாருமே இல்லை. இவர்களுக்கெல்லாம் தலைக்கனம். இவனையும் நண்பனாகக் கொண்டேனே! நான் ஒரு பேயன்... மடையன்...விசரன்'' என்னென்னவோ அவன் வாயில் வந்து கொண்டிருந்தன.

சுந்தரேசனின் நண்பனொருவன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சுற்றுலாச் சென்ற போது, எங்கேயோ தற்செயலாகச் சந்தித்த முகவரி கொடுத்து இற்றை வரைக்கும் தூய நட்பு வளர்த்துக் கொண்டிருக்கும் நண்பன் என்றைக்குமே அவன் சுந்தரேசனுக்கு நல்ல நண்பன் எங்கேயோ இருந்து கொண்டிருக்கும் அவனால் தான் இன்று இந்த வேதனை. சும்மா இருக்காமல் ராகவனை அவனுக்கு அறிமுகப்படுத்தப் போய் வந்த சோதனை. எப்படியோ நட்பு வளர்த்துக் கொண்டு விட்டார்கள். ராகவனுக்குக் கூட அவனில் நல்ல பிடிப்பு ''டேய் நீ அறிமுகப்படுத்தின நண்பன் நல்ல குணமடா. நல்ல திறமைகள் அவனுக்குள்ளே ஒளிஞ்சு கொண்டிருக்கு. இப்படி எனக்குக் கிடைக்கக் குடுத்து வைத்திருக்க வேண்டும'' என்று அவன் கூட எத்தனை முறை வாய்விட்டுக் கூறியிருக்கின்றான் அவன்தான் இப்போது வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கின்றான். காரணம மிக மிக அற்பம்.

எனஎறைக்குமே சளசளத்துக் கொண்டிருக்கும் ராகவன் இன்று வார்த்தைகளைப் பாவிக்கக் கஞ்சத்தனம் பட்டுக் கொண்டிருந்தான். சுந்தரேசன் துருவித் துருவி விசாரிக்க உண்மை வெளி வந்தது.

''டேய் சுந்தர்.....எனக்கு உந்த நண்பன் வேண்டாமடா''

''ஏன் உனக்கு அவனோட பழகத் தகுதியில்லையெண்டு நினைக்கிறியோ'' கேலியாகக் கேட்டான் சுந்தர்

'அவனுக்குத் தான் தகுதியில்லை'

''நிமிர்ந்து ராகவனின் கண்களை ஊடுருவிப் பார்க்கின்றான்.

''ஏனெண்டு சொல்லன். உங்களுக்குள்ள ஏதாவது கொழுவலோ, அப்படி ஏதும் இருந்தால் எனக்கு எழுதியிருப்பானே''

''என்னடா சொல்லன்''

''எனக்குப் பிடிக்கேல்ல''

''இவ்வளவு நாளும் பிடிச்சது. இப்ப ஏன் பிடிக்கேல்ல, நீ தானே அவனைப்பற்றி புழுகித் திரிஞ்சனி என்னெண்டு சொல்லன்''

''ஓமோம் அவன்ர வண்டவாளமெல்லாம் இப்பதான் தெரியுது.

''ஊத்தவாளி''

''ராகவன்...'' சுந்தரேசனுக்கு முகம் சிவந்து விட்டது. ''கதைக்கிறத மரியாதையாய் கதைச்சுப்பாடு. இண்டைக்கு எனக்கு வயது இருபத்தி ஆறு. அவனோட பதினாலு வயசில பழகத் தொடங்கினனான். பன்ரெண்டு வருசமாக அவனைப் புரிஞ்சு கொண்டிருக்கின்றன். அவனைப் போய் என்னவோ என்கிறாய். இத்தனைக்கும் என்னட்ட தன்ர சுபாவம் முதலாக எதையும் மறைக்காமல் எழுதியிருக்கிறான் தெரியுமே''

''உனக்குக் கடிதத்தில அப்பிடி எழுதியிருப்பான். நேரில நீ காணேல்லத்தானே! அவனோட வேலை செய்யிற என்ர நண்பன் எல்லாம் எழுதினான். சரியான திமிராம். ஒருத்தனையும் மதிக்கிறது கிடையாதாம், தான் நினைச்சபடிதான் எல்லாமாம். எல்லாத்துக்கும் மேலால பெண்கள் விசயத்தில் ஆள் சரியில்லையாம். சரியான காவாலியாம்''

''காணும் நிப்பாட்டு... யாரோ சொன்னதைக் கேட்டு நீ இப்ப சொல்லுறாய். நீ மட்டும என்ன நேரில போய் பார்த்தனியா? அவனே எனக்கு எல்லாம் எழுதியிருக்கின்றான். அவன் எல்லாரோடும் சமமாகப் பழகிற ரகம். நிறைய நண்பர்கள் இருக்கேக்க ஏன் நிறைய நண்பிகள் இருக்கக் கூடாது அதுதானடா நட்பு. கள்ளமில்லாமல் பழகிற நட்படா அது. உன்னைப் போலப் புரியாதவன் தான் அப்பிடி எழுதியிருப்பான். எப்பையுமே ஒரு முற்போக்கானவன் இருந்தால் அவனுக்கு எதிர்ப்பு கெட்ட பெயர் தான். யதார்த்தவாதிகளை இந்த உலகம் இலேசில் ஏற்றுக் கொள்ளாது.''

''கதையைவிடு. சுந்தரேசன் நான் அவனோட பழகிறது அம்மாவுக்கு விருப்பம் இல்லை.''

''ஓகோ! அம்மாவையும் துணைக்கு இழுக்கிறியாக்கும். நீ அம்மாவைக் கேட்டிட்டா அவனோட பழகினனி? உன்ர அம்மாவுக்கு மற்றவர்களைப் பற்றித் தெரிந்த அளவுக்கு தன்ர மகனைப் பற்றித் தெரியாதுபோல இருக்கு! யாரோ எழுதினதை வைச்சு அவனைப்பற்றிச் சொன்னாயே. அவன் எழுதினான். நான் நேரில் இருந்தே சொல்லுறன். அத்தனையும் உனக்குத்தான் பொருத்தம்''

ஆவேசத்தில் பேசிக்கொண்டு போனவன் திடீரென்ற குரலைத் தாழ்த்திப் பரிதாபமாக இராகவனைப் பார்க்கிறான்.

''என்னை மன்னிச்சிடு ராகவா! நீ நினைக்கிறமாதிரி அவன் கெட்டவனாகவே இருக்கட்டும். நீ அவனுடைய நண்பன் தானே உனக்கு நிறைய உரிமை இருக்கு. அவனைத் திருத்த உன்னால் முடியாதா? இப்பிடி நண்பர் விஷயத்தில் கூட அம்மா சொல்லைத் தட்டாத பிள்ளைதான் நீ என்று தெரிந்திருந்தால் அப்பவே வேண்டாம் என்றிருப்பன்.''

''சுந்தர் அது என்னுடைய பிழை. ஆரம்பத்திலேயே அவனைப்பற்றி அறியாமல் பழகிப் போட்டன். வீட்டிலுள்ளவர்களை எதிர்த்துக் கொண்டு வாழ என்னால ஏலாது, இஞ்சபார்! அவன் எழுதின கடிதங்கள்''

அவன் காட்டிய பக்கத்தில் குவியலாகக் கிழித்துப் போட்டிருந்த கடிதங்களைப் பரிதாபமாகச் சுந்தரேசன் பார்த்துக் கொண்டிருக்க சரேலென்று தீப்பெட்டியை உரசிக் கடிதங்களைப் பற்ற வைத்தான். ராகவன் ஒரு தூய்மையான நண்பன் கண்முன்னால் கருகிச் சாவது போல உணர்வு தோன்ற முகம் சிவக்க எழுந்து வெளியே நடக்கின்றான் சுந்தரேசன்.

எதிரில் ராகவனின் தாய்; ஒரு விதமான பார்வையுடன் அவனைக் கடந்து சிறிதுதூரம் சென்று ''தம்பி இனி இஞ்சவாறதைச் கொஞ்சம் விலத்திக் கொள்ளும்''

நெஞ்சில் யாரோ மிதித்தார்கள். ஏன் என்று கேட்கவில்லை. ஒரு உத்தம நண்பனிலும் பார்க்கவா இவனின் நட்பு. தனது உயிர் நண்பன் இவர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டுவிட்ட உணர்வு திடீரென்று தோன்ற முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து நடக்கிறான் சுந்தர்.

செல்வி நெலோமிகூசைநாயகம்
புனித சவேரியார்
பெண்கள் ம. ம. வி.
மன்னார்.

# தேனருவி

திருக்காட்சி விழா (07–01–89)

## மீண்டும் புதிய பார்வை

கீழைத் தேயக் கிறிஸ்தவர்களுடைய கிறிஸ்மஸ் விழா என்று கூறக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இவ்விழா கடன் திருநாளாக உலகெங்கும் அனுசரிக்கப்படுகிறது இவ்விழாவின் வாசகங்கள் விபரிக்கும் கதாபாத்திரங்களும் அடையாளங்களும் இவ்விழாவின் மேன்மையைப் புரிந்து கொள்ளத் துணைபுரியும்.

ஞானிகள் (மாகர்) இவர்கள் விஞ்ஞானத்தில்பாண்டித்தியம் பெற்ற மேதைகளாயிருப்பர். இவர்கள் பொதுவாக குருகுலத்தைச் சார்ந்தவர்களாயும், அரசர்களுக்கு ஆலோசகராயும் விளங்கினர். இவர்கள் வான சாஸ்திரம் கற்றிருந்தார்கள் என்பது வெள்ளிடைமலை. மூன்று பரிசில்கள் வழங்கியபடியால் 3 ஞானிகள் எனவும், பாரம்பரியத்தில் இவர்கள் கஸ்பார், மெல்க்கியோர், பல்த்தஷார் எனவும் அறியப் படுகிறார்கள்.

கீழ்த்திசை (எழுவான்) ஜெருசலேமும் அங்கு உயர்ந்து நின்ற ஆலயமும் யூதமக்களின் இறை உணர்வின் தனிப்பெரும் சின்னமாய் திகழ்ந்தன. வேறு நாட்டவர், மன்னர்கள் யாவரும், யூத மக்களின் ஒரே உண்மைக் கடவுளைக் காணவும், வழிபடவும் வருவார்கள் என்பது, அவர்களது தளராத நம்பிக்கை. இதை இறைவாக்கினரும் வளர்த்தனர். எனவே ஞானிகள் கீழ்த்திசையில் இருந்து என்பது நிச்சயமாக 'யூதரல்லாத இனத்திலிருந்து' என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இவர்கள் அரேபியா, பாரசீக நாடுகளிலிருந்தோ, இந்திய மண்ணிலிருந்தோ வந்தனர் என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமே.

காணிக்கை:

பொன், தூபம், வெள்ளைப் போளம் என அவர்கள் கொடுத்த கொடைகள் பிள்ளை பிறந்தவுடன் சாதாரணமாய் வழங்கும் பரிசில்கள்தான். தாய் - பிள்ளை, இவர்களது பராமரிப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் தேவையானவை. அதேவேளை இவை மெசியாவின் இயல்புகளின் அடையாளங்களாயும் விளங்கின. பொன் - அரசமாட்சிமையையும்; தூபம் - வழிபாட்டின் அடையாளமாக அவரது குருத்துவம் அல்லது தேவத்துவத்தையும்; வெள்ளைப் போளம் அடக்கத்தின் அடையாள்மாக அவரது மரணம் அல்லது மனிதத்துவத்தையும் குறிக்கின்றது என்பது இன்னொரு பாரம்பரியம்.

விண்மீன்: (வெள்ளி)

வான சாஸ்திரத்தில் ஒவ்வொரு வெள்ளியும் ஒவ்வொரு மனிதரில் செலுத்தும் செல்வாக்கு பற்றியும் கூறுகிறது. இது நம்பமுடியாது இருப்பினும் மனித மூடநம்பிக்கைகளிலும் இறைவன் ஒரு விசேட நட்சத்திர காட்சியினூடாக ஞானிகளைச் சித்திக்கத் தூண்டி, உண்மையைத் தேட அருள் கொடுக்கிறார்.

ஏரோது. தலைமைக்குரு, சட்ட வல்லுனர்: இவர்கள் யூத பரம்பரையில் பிறந்திருப்பினும் அவர்களது செல்வமும், அதிகாரமும், அறிவும் மெசியாவை இனம் கண்டு, ஏற்று வழிபட தடைச் சுவர்களாக மாறின. அதுமட்டுமல்ல 'புறஇனத்தவர்' இறைவனைத் தேடிச் செல்லும் பாதையில் தடைக் கற்களாயும் நின்றனர். இவை இன்றும் கிறிஸ்தவர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் இடையில் நிலவும் விசுவாசப் போராட்டத்தை ஞாபகப்படுத்துகிறது.

மொத்தத்தில், இறைவன் அனைத்து மக்களுக்கும் உரியவர் மொழி, கலாச்சாரம், இனம், மண் என்று கூறு போடுவது மனிதனின் குறுகிய மனதைக் காண்பிக்கிறது. உண்மையில் இவை இறைவனை அறியவும், அன்பு செய்யவும கருவிகளாய்ப் பயன்பட வேண்டிய அவரது கொடைகளே.

இறைவன் பொதுவானவர். அதனால் இயேசுவும் பொதுவானவர் ஆகவே திருச்சபையும் பொதுவானது. ''கத்தோலிக்க திருச்சபையை'' விசுவசிக்கும் நாம் எல்லா மொழி, இன நாட்டு, சாதி மக்களையும் இறை மக்களாகக் காண்கிறோமா? எல்லா கலாச்சார அடையாளங்களும், மதிப்பீடு ஆண்டவரைப் பற்றிய செய்தி கூறும் விண்மீன்களாகக் கருதுகிறோமா? ஏரோதும் அனைது சகாக்களும் செயல் புரிந்தது போன்று இறைவன் என்ற பேரொளியை மறைக்கும் கருமுகில்களாகச் செயற்படுகிறோம்?

எட்டுத் திசை மக்களும் பேதமின்றி தெய்வ தரிசனம் பெற அனைவரையும் அள்ளி அணைக்கும் பெரு நிழல் மரமே 'கத்தோலிக்க திருச்சபையாகும். திருத்தந்தை முதல் இறுதி கிறிஸ்தவர் வரை அணைக்கும் இப் பரந்த விரிந்த மனநிலையுடன் செயல்பட புதிய பார்வை பெற திருக்காட்சி விழாவில் வேண்டுவோம்.

சுவாமி ஜீவாபோல் அ. ம. தி

இசை 60: 7—6 மக்களினங்கள் உன் ஒளிநோக்கி வருவர்.
எபே 3: 2—9 புற இனத்தவரும் இறைமக்களே.
மத். 2: — ஞானிகள் வணங்கிக் காணிக்கை செலுத்தினர்

# இளமை என்னும் சோலையிலே....

இளமைப் பருவமானது இறைவனால் நமக்கு அருளப்பட்ட செல்வமாகும். உயர்ந்தோர்–தாழ்ந்தோர், ஏழை–பணக்காரன், படித்தவன்–பாமரன் என்ற பாகுபாடு காட்டாமல் நமது அன்புத் தந்தை நம் எல்லோருக்கும் பாரபட்சமின்றி அள்ளி வழங்கும் வரப்பிரசாதம் அது.

கள்ளங்கபடமற்ற சிறுவர் பராயம் முடிந்து இளமை என்ற அந்தஸ்தை அடையத் தொடங்கும் அந்த வேளையில் நாம் தவறான பாதையில் சென்றுவிடாது மிகுந்த எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இளமைக்கென்றே ஒரு தனி அழகுண்டு. இளமை ஒரு தனிக் கலை. இளமைப்பருவத்தே தோன்றும் வீரத்தைக் கற்பாறைக்கு ஒப்பிடலாம். இங்ஙனமாக இளமை என்னும் சோலையிலே ஆற்றல்கள் வற்றாத நீரூற்றாகும் பொங்கி வரும் காட்டாற்று வெள்ளம் போல இப்பருவத்திலே ஆற்றல்கள் பொங்கிப் பிரவாகிக்கின்றன. நாம் கண்டுணராத ஆற்றல்களும் நம்மிடையே மலிந்து கிடக்கின்றன. நாம் அதைக் கண்டு வளர்க்கும் போது அது மடை திறந்த வெள்ளம் போல் பீறிட்டுப் பாய்கிறது. அதை அணை போட்டுத் தடுத்து உரியவழியில் செலுத்தாவிடில் அது குரோதம், பகை, வன்மம், பழிக்குப்பழி போன்ற தீயவழிகளில் பயன்படுத்துவதற்கு ஏதுவாய் அமைந்து விடுகின்றது.

மாறாக, அவற்றை நன்னெறியில் பயன்படுத்தினால் நாட்டிற்கும். வீட்டிற்கும் மிகுந்த பயன் தரும் என்பது திண்ணம். எனவே ஒரே முறை தான் கிடைக்கும் இந்த கிடைத்தற்கரிய சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி நற்பேறடைவோம்.

செல்வி லூசியா சூசைப்பிள்ளை
யாழ்ப்பாணம்

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
6-1-1989

## ஈந்து இதயம் மகிழுவீரே




இருப்பதைக் கொடுக்க
என்றும்
பெருகிடும் ஈகை அன்றோ.

இலைமறை காய்போல்
இருப்போர் கூட
ஈதலின் பின்னால் வெளியே
வருவர்

இரங்காமல் ஈய்கின்ற மனம்
இருப்போர்க்கு வாழ்வே சுபம்.

இரக்கத்தில் சுரக்கின்ற
ஈகைகடனங்கள்
இயல்பாகச் சிரிக்கின்ற
அழகே என்னே !

இல்லாமை இல்லாத
நிலைவேண்டி
எல்லோர்க்கும் ஈய்கின்ற
கலைவேண்டும்.
இல்லை இல்லை என்றால்
இல்லை என்பதே எஞ்சிநிற்கும்.
இருக்கும்வரை கொடுக்க
முயலு
இல்லை எனும் நிலையே வராது.
இகழ்வாற்றல் செயலாய்
மடியும்
புகழ்நோக்கில் ஈதல்
தொடரின்.
இதயம் நொந்து வருந்து
வோரே
ஈந்து இதயம் மகிழுவீரே.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## எதிர் நீச்சல்

சிந்தையிலே நலம் கொண்டு
இறை அன்பர் பணி தொடர
வேதனைகள் வருவதுண்டு
சோதனைகள் வருவதுண்டு
வருவது வரட்டுமென எதிர் நீச்சல் போடுங்கள்.

பக்தி மார்க்கம் தனிலே—தினம்
சித்தமாய் இறைவனை வணங்கி—உளம்
சுத்தமாய் நீங்கள் வாழ்ந்திடவே
வாழ்வினில் எதிர் நீச்சல் போடுங்கள்.

வாழ்வினில் இறைபணி கொண்டிருந்தால்—உங்கள்
உளமதில் இறைமகன் குடிகொள்வார்
வாழ்வினில் வருந்துயர் எல்லாம்—அவர்
வாழ்த்தினால் வராது தடுத்திடலாம்

M. M. நிக்ஸன்

---

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது பஞ்சு மெத்தையும் அல்ல; ரோசா மலரும் அல்ல, நீரோடை போன்றதே வாழ்க்கை. அந்த நீரோடையில் நரி, புலி, சிங்கம் போன்ற கொடிய விலங்குகள் தங்கள் தாகத்தை தீர்த்துக் கொள்கின்றன. அதே நீரோடையில் தான் புள்ளிமான், செம்மறி ஆடு போன்ற வஞ்சகமற்ற விலங்குகளும் தங்கி நீர்வேட்கையைத் தீர்க்கின்றன.

அ. மேரி றெஜினி,
நானாட்டான்.

## எது?

துன்பத்திற்குப்பிறப்பிடம் எது?
இன்பத்திற்கு அழிவிடம் எது?
தோல்விக்குப் பிறப்பிடம் எது?
வெற்றிக்கு அழிவிடம் எது?
தீமைக்குப் பிறப்பிடம் எது?
நன்மைக்கு அழிவிடம் எது?
வறுமைக்குப் பிறப்பிடம் எது?
வாழ்வுக்கு அழிவிடம் எது?
அனைத்திற்கும் காரணம் எது?

## சோம்பல்

எழுதியவர்
யோ. சசிகலா
சென்ஜேம்ஸ், இளவாலை

---

## இளைஞனே !

துன்பங்கள் வருவது இயற்கை.
துன்பங்களைக் கண்டு
அங்கலாய்க்காதே
மனதில் சோர்வு என்பதற்கு
இடம் வையாதே.
எந்நேரமும் மனதில் உறுதி
கொண்டு செயற்படு.
எதிலும் உறுதியுடன்
செயற்படு.

மேரியன் சேவியர்,
வவுனியா.

---

## சிரித்துச் சிந்திக்க!

பாவசங்கீர்த்தனம் செய்துவிட்டு தேவநற்கருணைபெற இருந்த ஒருவனை அவனது எதிரி முறைத்துப் பார்த்து முதுகில் படும்படியாகத் தட்டிச் செல்கின்றான், அதனைத் தாங்க முடியாத இவன் "இப்பதான் பாவசங்கீர்த்தனம் செய்துவிட்டு தேவநற்கருணை பெற இருக்கின்றேன். பொறு, பொறு பூசை முடியவந்து கவனிக்கின்றேன்" என்றானாம்.

ஒவ்வொரு நாளும் பின்னேரம் விளையாடி முடிந்து 8மணிக்குப் பின் வீடு வரும் மகனிடம் தந்தை.

"இன்று விளையாடி முடிய 8 மணிக்கு முதல் வீட்டவந்துவிடவேண்டும். பிந்தினால் வீட்டு வாசல்படியைக் கூட மிதிக்க நினைக்காதே" என்று கூறி அனுப்புகின்றார். அவன் விளையாட்டு மைதானத்தில் இதுபற்றி தன் நண்பனிடம் கூறுகின்றான். உடனே அவன் திருவாலி இதைப் பற்றி ஏன் கலலைப் படுகின்றாய் ? நீ தான் நீளம் பாய்தலில் முதல் இடம் பெற்றவன் ஆயிற்றே. எனவே வாசற்படியை மிதிக்காமல் உள்ளே பாய்ந்துவிடு என்றான்.

R ஜோசப் ஜெயகாந்தன்
கொழும்பு—15

---




## பெற்றோரே-மறையாசிரியர்கள்

குடும்பம் என்பது ஒரு கோவில். இக்கோவிலின் தெய்வங்கள் எம் பெற்றோரே ஒரு குடும்பத்தின் தனிச்சிறப்பைப்பற்றிப் பலர் பலவாறாகக் கூறக் கேட்டிருக்கிறோம் "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்றும், அது ஒரு "கலைக் கோயில்" என்றும். அது ஒரு "குட்டித் திருச்சபை" என்றும் பல கற்றறிந்த கல்விமான்கள். ஆன்றோர்கள் கூறுவதை நாம் காதாரக் கேட்டிருக்கிறோம். கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால், கிறிஸ்தவ குடும்பம் கிறிஸ்துவில் வாழும் குடும்பம் எனறால் மிகையாகாது- கிறிஸ்துவின் சாயல் விளங்க உயிர் வாழும் கிறிஸ்துவை உலகிற்கு எடுத்துக் காட்டுவதே கிறிஸ்தவ குடும்பத்தின் பணி ஒரு பிள்ளையின் எதிர்கால வாழ்வு பெற்றோரின் உருவாக்கலிலேயே தங்கியுள்ளது. இவ்உருவாக்கல் முதன்முதலில் குடும்பத்திலேயே இடம்பெற வேண்டும். பிள்ளைகளாகிய நாங்கள் ஒரு நாளிலே அதி கூடிய நேரத்தை எம் பெற்றோரிடம் செலவழிக்கிறோம் எவ்வாறு ஒரு குயவன் களிமண்ணை எடுத்து தான் விரும்பிய வடிவிலே பானையை அமைக்கிறானோ அது போல் எம் பெற்றோரே எம்மை வருங்கால பிரசைகளாக உருவாக்குகின்றனர். விசுவாசம் எனும் வித்தை எம் பெற்றோர் ஞானஸ்நானம் மூலமாக விதைத்துள்ளனர். அத்தோடு அவ்வித்தை வளர்ந்துவர தமது படிப்பினையால் அவர்களே நீர் ஊற்றிப் பராமரித்து வருகின்றனர். எனவே அவர்கள் எமக்கு மறையாசிரியர் என்று கூறினால் சாலப் பொருந்தும்.

பிள்ளைகளாகிய எமக்கு உயிர் அளித்த பெற்றோர் அதை நல்ல முறையில் உருவாக்குவதில் பெரும் பங்கேற்கின்றனர், உயிரின்றி உடலில்லை. அது போல பெற்றோரிலே கிறிஸ்தவ பிரதிபலிப்பு இல்லையென்றால் பிள்ளையில் கிறிஸ்துவை உருவாக்க முடியாது. கிறிஸ்தவ உருவாக்கலில் பெற்றோரிடம் காணப்பட வேண்டிய முக்கிய அம்சம் ஒழுக்கம் என்றே கூறலாம் தாய் தந்தையிடையே ஒழுக்கம் இருந்தால் தான் பிள்ளைகளிடமும் அது சிறந்து விளங்கும். ஒழுக்கமற்ற பெற்றோர் ஒருபோதும் தம் பிள்ளைகளிடையே ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

கிறிஸ்தவ உருவாக்கலிலே பெற்றோர் அன்பு எனும் மொழியால் மறை என்னும் பாடத்தை தம் வாழ் வாலும் வார்த்தையாலும் கற்பிக்க வேண்டும் அன்பு குடிகொள்ளும் உள்ளத்தில் இறைவனின் திருவுருவைக் காணலாம் அன்பே மயமான இல்லமே கிறிஸ்துவின் உருவம் வாழும் இல்லிடமாகும்.

அன்பு இருந்தால் அமைதி இருக்கும். அங்கே திருமறை துலங்கும். எமக்கு உயிரளித்த பெற்றோர் எம் சமூகத்தில் நாம் தலை நிமிர்ந்து வாழ தேவையான பண்புகளையும், கிறிஸ்தவ வாழ்வில் சிறக்க வேண்டிய மகிப்பீடுகளையும், எம்மில் வித்திட வேண்டும் பிள்ளைகளாகிய எம்மை இறைமக்கள் கூட்டத்தில் படிப்படியாக இட்டுச் செல்லும் பணியை எம் பெற்றோரின் கையிலே இறைவன் கொடுத்துள்ளார். நாம் எம் வாழ்விலே அதிகக் கூடிய நேரத்தை எம் அன்னையோடே செலவிடுகிறோம் ஆகவே கிறிஸ்தவ உருவாக்கலில் அதிகம் பங்கெடுக்க வேண்டியவள் எம் அன்னை தான். ஒரு பிள்ளை இறைவனுக்கும் மனிதனுக்கும் உலகத்திற்கும் உகந்ததான உருவாக்கத்தை எம் தாய் தான் ஆற்ற முடியும். தாயின் உதரத்திலே கரு உருவாகி வளரும் போது நல்ல எண்ணங்களையும் கிறிஸ்தவ நல் மகிப்பீடுகளையும் உருவாக்க வேண்டிய பொறுப்பு தாயிடமே உள்ளது பிறந்த பின்னும் கண்ணை இமை காப்பது போல பிள்ளையின் நல் வாழ்வைக் கருத்திற் கொண்டு நல்ல சூழ்நிலையை ஆக்கிக் கொடுப்பது தாயின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

ஒன்றுபட்ட மனத்தவராய் தாயும் தந்தையும் தம் பிள்ளைகளை திருமறையில் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். ஆனால் பல காரணங்களினால் இக்காலத்தில் தந்தையர் இப்பொறுப்பினைத் தாய்மாரிடம் கடத்திவிட்டு தாம் ஒதுங்கிவிடுகின்றனர். தாய்மாரின் செல்வாக்கினால் பெண்பிள்ளைகள் ஓரளவு உருவாக்கம் பெற்று வருகின்றனர். ஆனால் ஆண்பிள்ளைகள் தனிக் காட்டுராஜாக்களாக வளரும் அவல நிலையைப் பல குடும்பங்களில் காணுகிறோம். பிள்ளையின் மறையறிவில் ஈடுபடும் தந்தை தானும் வளர்ப்பவனாக இருக்க வேண்டியது அவசியம்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் -8

**ஓசேயா—3**

இஸ்ராயேலின் ஒழுங்கீனம் ஆமோசின் காலத்தைவிட ஓசேயாவின் காலத்தில் மோசமாக இருந்தது. யூத மதக் குருக்களும் உயர்குடிமக்களும், அரசர்களும் சீர்கேடுகளுக்கு காரணமாக இருந்தனர். பாவால் சிலை வழிபாட்டில் ஈடுபட்டு முதலாம் கற்பனைக்கு எதிரான குற்றங்களோடுமட்டும் இஸ்ராயேல் மக்கள் நிற்கவில்லை. தங்களது நெறிப்பற்றற்ற தன்மையாலும் பாவப்போக்காலும் மற்றக் கற்பனைகளுக்கு எதிராகவும் பாவம் செய்தனர். சபித்தல், பொய் ஆணை கொலை, கொள்ளை, விபச்சாரம், நேர்மையின்மை, பேராசை, சபடம் ஆகிய பாவங்களையும் அவர்கள் செய்தார்கள் என்று இறைவாக்கினர் ஓசேயா தமது போதகத்தில் குறிப்பிடுகின்றார்

யூதமறையைக்காக்க வேண்டிய குருக்களும், மூப்பர்களும் ஊழல் மிக்கவர்களாயினர் அரசியல் கொலைகள் பெருகின. அரச மரபு இழிவுபட்டது. காலப் போக்கில் அரசர்கள் இறைவனின் ஊழியர்களாக இருப்பதற்குப் பதிலாக இறைவனிடமிருந்து வெகுதூரம் அகன்றுபோயினர் என்று ஓசேயா குற்றம் சாட்டுகிறார். இறைவனது சித்தத்திற்கு எதிராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்கள் உலகியல் போக்கைப் பின்பற்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைப் பிறமக்களின் நிலைக்குத் தாழ்த்தினர் என வன்மையாகக் கண்டிக்கின்றார்

மக்களின் இறைவழிபாட்டைப் பொறுத்தமட்டில் குறைவில்லாமல் வழிபாடுகள் இடம் பெற்றன. பலிப்பீடங்களும் பலிகளும், திருயாத்திரைகளும் பெருகியிருந்தன. ஆனால் இவற்றில் யாவேய்க்கு இடமேயில்லை. பெரும்பாலும் படைக்கப்பட்டவற்றையே வழிபட்டனர், யாவேயை வழிபடாது பாவாலை வழிபட்டனர் இஸ்ராயேலர் கானானில் குடியேறுமுன் அங்கு வாழ்ந்த மக்களின் சிற்றின்ப வழிபாட்டு முறைகள் இஸ்ராயேலரிடையேயும் ஆழமாக வேரூன்றின. இறைவனைக் கைவிட்டு அகன்று ஆன்மீக விபச்சாரம் செய்தனர். இதை இறைவாக்கினர் ஓசேயா கண்டிக்கிறார். இவையெல்லாம் மக்களின்மேல் போரையும், அழிவையும் தண்டனையாகக் கொண்டுவரும் என்று ஓசேயா எச்சரிக்கின்றார்.

இறைவாக்கினர் ஓசேயாவின் இறைவாக்குரைப்பணியை உற்றுநோக்குமிடத்து அவர் ஆழ்ந்த உணர்ச்சியும், நுண்ணுணர்வும் கொண்டவர் அவரது சொந்த வாழ்க்கையில் உணர்ந்ததையும், அனுபவித்ததையும் இறைவாக்குரைக்கும் பணிக்குப் பயன் படுத்துகிறார்.

இறைவனே அன்பு. அந்த அன்பு ஒரு போதும் தவறாது, கைவிடாது என்பது ஓசேயாவின் சொந்த அனுபவம். இதுவே அவரது உறுதியான போதகமாகவும் அமைந்தது.

இ. சா பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 62

## இஸ்ராயேல் சட்டத்தின் மேன்மை

படைக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் தங்கள் இயல்புக்குத் தக்க சட்ட வரம்புக்குள்தான் இயங்கி வருகின்றன, மனிதன் பகுத்தறிவுள்ளவன் அவன் விரும்பினால் சட்டப்படி நடக்கலாம் விடலாம். அவனுக்குச் சுதந்திரமுண்டு அதனால்தான் மனிதன் தவறினான் இருளில் தடுமாறினான். எனவேதான் அன்பே உருவான இறைவன் மனிதனுக்கு மனச்சான்று மட்டும்போதாது அவனுக்கு வழிகாட்ட வெளிப்படையான சட்டம் வேண்டும் என்று சீனாய் மலையில் சட்டங்களையும் கட்டளைகளையும் கொடுத்தார்

இச்சட்டங்களைத்தான் எபிரேய மொழியில் 'தோரா' என்று அழைத்தனர். இது சமய, சமூக சட்டங்களையும் நல்லொழுக்கங்களையும் குறிக்கின்றது. பத்துக்கட்டளைகளை இறைவன் பிற்காலத்தில் தர இருந்த எல்லாச் சட்டங்களின் அடிப்படையாகக் கொடுக்கின்றார். யாத். 21ம்-23ம் அதிகாரம் வரையுள்ள சட்டங்கள் அனைத்தும் புதிய சூழ்நிலையில் பலதரப்பட்ட காலங்களில் 10 கட்டளை என்ற அடிப்படையிலிருந்து உருவான குடும்பங்கள். இஸ்ராயேல் மக்கள் பல புதுப்பிரச்சினைகளை மோயீசனிடம் கொண்டுவந்தனர். அதற்கு விடைகாண 10 கட்டளையின் அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்பட்டன. அது மட்டுமல்ல, கானான் நாட்டில்கூட சட்டங்கள் உருவாயின. இப்படியாக நாம் சட்டப் புத்தகங்களில் (வேதாகமத்தில் முதல் 5 புத்தகங்கள்) காணும் சமூக அரசியல் திருவழிப்பாட்டு நல்லொழுக்கச் சட்டங்கள் உருவாயின.

இஸ்ராயேல் சட்டங்கள் அனைத்தும் மக்களை இறைவனிடம் இட்டுச் செல்லும் வழிகாட்டிகள். எல்லாம் பரிசுத்தத்தை மையமாகக் கொண்டது. இது வெளித் தூய்மையையும் அகத் தூய்மையையும் குறிக்கும் "நாம் பரிசுத்தராய் இருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் (லேவி. 19:2)

—இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்

வாசகர்களே!

''ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு'' என்ற இயேசு பெருமானின் இன்றைய வார்த்தையை என்றோ ஒரு நாள் கூறிப் போந்தார் ப. மொ. ஆசிரியர்.

"அகந்தை எங்கே இருக்கின்றதோ, அங்கே அவமானமும் - தாழ்ச்சி எங்கேயோ அங்கே ஞானமும் உண்டு!

என்று கூறி 11 : 2ல் கூறிய ஆசிரியருக்கு ஈடு இணை இல்லாதவிதமாக எம்மூர் அறிஞர்களும் கூறுகின்றார்கள். ...

"தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்''

இன்னென்று கேட்பீர்களா? இன்று எங்கள் மத்தியிலே யார் பெரிது யார் முந்தி வந்தவர்கள்? என்ற போட்டி மனப்பான்மை நிலவுகின்றது இல்லையா?

இவைகளெல்லாம் மனித பெலவீனத்தால் வரும் குறைபாடுகள் தானே :

தெட்டத்தெளிவாக நம்மூர் அறிஞர்கள்சுருக்கமாக- நெருக்கமாக கூறுகிறார்கள். ''வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்றும்

''தான் வெட்டிய குழியில் தானே விழுவான்'' என்றும் கூறி இருக்கிறார்கள்.

பதிலடி கொடுக்கிறார் வேதாகம ஆசிரியர் 11 : 3ல் "நீதிமான்களின் நேர்மை அவர்களை நடத்தும், தீயோரின் கதியோ அவர்களை நாசமாக்கும்.

எங்களை வருத்தியவர்கள், துன்புறுத்தியவர்கள் எமது அழிவை எண்ணி கைகொட்டிச் சிரித்தவர்கள் - இன்று அனுபவிக்கும் கொடுமைத் தனங்களைக் கண் கூடாகக் காண்கின்றீர்கள் தானே? எமது முதுமொழியாளர்கள், சுட்டிக்காட்டி இறை நீதியை எண்பிக்கின்றார்கள் முதுமொழியிலே! எப்படி?

"வினை விதைத்தவன் வினை அறுப்பான் - தினை விதைத்தவன் தினை அறுப்பான்"

உடனே பதிலடி கொடுக்கின்றான் திருநூல் ஆசிரியர் இப்படியாக.

''நீதிமானின் வாய் ஞானத்தைப் பிறப்பிக்கும் - தீயோரின் நாவு நாசமடையும்'' என்று 10 : 31ல் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

இன்று எம் நாட்டிலே நடக்கின்ற எத்தனையோ அசம்பாவிதங்கள் மத்தியிலும், "இறைவாக்கு நம்மை உருவாக்கும், என்ற நம்பிக்கையில் மீண்டும் தொடர்கிறேன்.

தொடர்ந்து, பழமொழிகளைப் பார்த்து மகிழ்வோமா? உங்கள் எண்ணங்களை எமக்கு எழுதித் தெரியப்படுத்துங்களேன்!

அன்புடன்
எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 3<br>சுடர்: 1 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### பேசும் விழி:

காவலன் கண்மணிகளே !

குழந்தை யேசுவின் நல்லாசிகள் என்றும் உங்களுள் நிறைவதாக.

தாவீதடிகளின் பரிசுத்திட்டத்தின் முடிவுகளைத் தரும் இவ்வேளையில் கருகிய யாழ் நூலகத்தையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறேன். விழிகள் நீர்த்துளிகளால் நிறைகின்றன. தாவீதடிகளின் ஏக்கப் பெருமூச்சு என் இதயத்தை எரிக்கின்ற வேளையில் உங்கள் ஆக்க பூர்வமான ஆக்கங்கள் இதயத்தைக் குளிரச் செய்கின்றன.

பிறந்திருக்கும் இவ்வாண்டில் நீங்கள் அனைவரும் புது ஆண்டுக்கு சித்தியடைந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். 11ஆம் ஆண்டுக் கண்மணிகள் பரீட்சைக்காக உங்களை நன்றாக ஆயத்தப்படுத்துங்கள்.

### தாவீதடிகள் பரிசுத்திட்டத்தில் பரிசு பெறுவோர்:

முதலாம் இடம்: அங். எண். 43; யே. றெஜினோல்ட்.
இரண்டாம் இடம்: அங். எண். 89; அ. திதிமுஸ் அன்புராஜ் லெம்பேட்
மூன்றாம் இடம்: அங். எண். 44; அனித்தா ஷாலின் பிரான்சிஸ்

நான்காம் இடம்: அ. எண். 18; வி. மறின் நிலானி.
ஐந்தாம் இடம்: அ. எண். 91; யே. இம்மனுவேல்.

பரிசு பெறும் கண்மணிகளே ! பரிசினை அனுப்ப வேண்டிய முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

கண்மணிகள் அனைவருக்கும் அன்புவிழியின் அன்பான புது வருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அன்பின்
அன்பு விழி

★ ★ ★

### அங்கத்துவம்

அ. எ. 125. தீ. புனித நட்சத்திரம் ஆண்டு 9.
மன்/முருங்கன் ம. வி.

அ. எ. 126. ஜொசி ராஜினி ஆண்டு 11.
புனித மேரி. த. ம. வி, புத்தளம்.

அ. எ. 127 ம. அன்ரன் யூட்
யா/புனித என்றியரசர் கல்லூரி, இளவாலை.

### கௌரவ அங்கத்துவம்:

A/6 தீ புனித யோகம், பள்ளக்கமம், முருங்கன்.

★ வாரம் ஒரு வார்த்தை;

ஆண்டவர் மீது நம்பிக்கை வை, நன்மை செய். புனித நாட்டில் எவ்விதக் கவலையுமின்றி இருப்பாய்.

(சங். 36: 3.)

★ ★ ★

### கல்வி:

''அ'' என்னும் அறிவைப்பெற
பயன் படுவது கல்வி
''அடக்கம்'' என்னும் பண்பைப்பெற
தூண்டு கோலானது கல்வி
''அன்பு'' என்னும் சக்தி பெற
ஊக்கியாய் யிருப்பது கல்வி
'பணிவு' எனும் தன்னடக்கத்தைப் பெற
நல்வழி காட்டுவது கல்வி
''அறம்'' என்னும் செயல் பெற்று
செழித்திட வைப்பது கல்வி.
அத்தனை செல்வத்தையும் பெற
என்றும் துணை புரிவது கல்வி.

ஆக்கம்; ஆ. வேஜினியா
A 2.



# வாசகர் கருத்து



14-11-88 அன்று பாதுகாவலனில் வெளியான எம்கருத்து ''புதியவைகள'' என்ற தலைப்பு இன்றைய சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானது.

மழைக்குக் காளான் முளைப்பது போலயேசுவை மையமாக வைத்து பல புதிய சபைகள் இன்று வேகமாகத் தோன்றுகின்றன தோன்றுவது மட்டுமல்ல ''புதியவைகள்'' என்ற தலைப்பில் வெளியானது போல ஒருவரை மற்றவர் கேலி செய்வதும் கிண்டல் செய்வதுமான சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன.

இவர்களை நாம் என்ன செய்வது? பிதாவே இவர்கள் அறியாமல்செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்பதா? இல்லை அறியாது செய்யும் இவர்களுக்கு நல்ல அறிவைக் கொடும் என்பதா?

மேலும் பிறமதங்களில் இருந்து இப்படிப் புதிய சபைகளில் சேருபவர்களை நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் கத்தோலிக்க மதத்தில் இருந்து இப்படிப் புதிய சபைகளில் மாறுபவர்களையும், மாறியபின் கிண்டல் செய்பவர்களையும் தான் பார்க்க மிகவும் வேதனையாக இருக்கின்றது. எனினும் கிறிஸ்து யேசுவில் உண்மையான விசுவாசம் இருக்குமானல் எந்த ஒரு கத்தோலிக்கனும் இப்படிப் புதிதாகத் தோன்றும் சபைகளில் சேரமாட்டான். எனவே அற்பவிசுவாசமுள்ள ஒரு சில கத்தோலிக்கர் மட்டும் இப்படிச் சேருவதில் நாம் கவலை கொள்வதில் நியாயம் இல்லை என நினைக்கின்றேன்.

மற்றும் 21-10-88 பாதுகாவலனில் சுவாமி.ஜீவாபோல் அவர்களின் கருத்தில் வெளியான ''நினைவுகள் வளர வேண்டும்'' என்ற கட்டுரை மிகவும் பாராட்டத் தக்க ஒன்றாகும். அவாது கருத்தில் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள இறை பிரசன்னம் முதலிடம் அதேவேளை புனிதர்களை மதியுங்கள், இறை வார்த்தை முதலிடம் அத்துடன் புனிதர்கள் வரலாற்றைப் படியுங்கள் இறைவன் முதலிடம் ஆனாலும் புனிதர்களின் நட்புறவும், பரிந்துரைகளும் நிறை பலனைத் தரும் என்ற உறுதியும் நம்பிக்கையும் ஊட்டும் வார்த்தை ஒவ்வொரு கிறிஸ்தவனின் இதயத்தையும் தொடும் என நம்புகிறேன்.

இவ்வார்த்தைகளில் இருந்து இறைவனே முதலிடம். அதன் பின்னரே புனிதர்கள் என்பதை ஒவ்வொருவரும் சிறப்பாக விளங்க முடிகிறது. கிறிஸ்தவ மக்களில் அனேகமானோர் படைத்தவரை மறந்து படைக்கப்பட்ட வர்களுக்கு முக்கியத்துவம்கொடுத்து வாழுகிறார்கள் எனவே ஒவ்வொருவனும் இறைவனையும் புனிதர்களையும் உணர்ந்து வாழ ''நினைவுகள் வளர வேண்டும்'' என்ற செய்தி மிகவும் உதவியாக உள்ளது

அ. பிரான்சிஸ்கா

## வேதாகம வினாவிடைப் போட்டி-21

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 30-1-89 ஆம் திகதிக்குமுன் பாதுகாவலன் த. பெ. இல. 2 என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள் பரிசு ரூபா **25/-** விடையும் பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 13-2-89 இல் வெளிவரும், விடைகளை நீதிபதிகள் ஆகமம் 11 — 15 அதிகாரங்களில் காணலாம்,

### வினக்கள்

1. ஆண்டுதோறும் இஸ்ராயேல் பெண்கள் ஒன்றுசேர்ந்து யாரைக் குறித்து நான்கு நாள் துக்கம் கொண்டாடுவர்?
2. ஜெப்தேயின் மகள் எவ்வாறு இறந்தாள்?
3. சாம்சனின் தந்தையின் பெயர் என்ன?
4. ''ஷிபோலத்'' என்ற சொல்லின் பொருள் யாது?
5. ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுவதுபோல் ஆயுதமெதுவுமில்லாமல் சிங்கத்தைத் துண்டித்தவரின் பெயர் என்ன?
9. 'ராமாத் லேக்கி' என்பதன் பெருள் என்ன?

### போட்டி 20 சரியான விடைகள்

(1) ஆண்டவரின் சமாதானம் (2) ஜெரோபாவால் (3) யோவாசு (4) மூன்று ஆண்டுகள் (5) காலாதியனையாயீர் (6) முந்நூறு பேர் ( ) (1700) ஆயிரத்து எழுநூறு பொன் சீக்கல்

பாராட்டுப் பெறுபவர்கள்

பாக்கியநாதர் விஜயலதா, இ. நிலோஜனா, தயாகரன், மனோகரன் மனோஜினி, செ. ஜெசி அமல்ராணி, பீற்றர் வில்பிரட் விஜேந்திரன், சூ. மெரிலின் சிராய்வா, க. சுமதி, பாக்கியநாதர் அன்ரனற், தா. சசிகலா, சு. சுதர்ஷினி, பேனாட் காஞ்சனா, தா. தாரணி, அ. சுகந்தி, அந்தோனிப்பிள்ளை உதயன், ஜெகநாதன் சுகந்தினி, சூ. கௌசி, அ. யஸ்ரின், பேனாட் ரேகனா, அல்பிரட் யோகினி, கோ. ரிமதி, அ. றீற்ரு, தே. யூடிற் சியாமினி, கா. பிரிட்டோ, அ. ஜேஸ் மலர், ஆபேல் மேரி நிர்மலா, எம். ஏ. செலஸ்ரின், அன்ரனி மேரி ஸ்ரெலா, ப. ஷறோமீ, ஆபேல் மேரி நோயெலா, கா. அலன்ரின், சூ. ஜெனிடா, கா மேரி அனஸ்ரினா, மரியதாஸ் அன்ரன் யூட், செ. அமிர்தநாயகம், சுபோதினி சூசை, ரஞ்சினி வயித்தியாம்பிள்ளை, நவரட்ணம் அமலநாத் பற்றிமா ஜேஸ் நவரட்ணம், போல் பிறிஜிற் சுகி. எ. மேரி ஆன் கிறேஸ் ஏ. அமல்ராஜ், ஜே கோட்வின் ராணி, தர்சினி சுந்தரமூர்த்தி, சாந்தி கிறேஸ். ஏ. அன்ரன் பெசில்.

பரிசுபெறும் நற்பேறுளர்

தயாகரன், போயிட்டி, இளவாலை

குறிப்பு :— ஏராளமானோர் போட்டியிற் பங்குபற்றினார்கள் பங்குபெற்ற அனைவருக்கும் எம் நன்றிகள்.

## மாதகல் பதியில் ஞானப்பிரகாசியார் பக்திச்சபையின் 600 வது கூட்டம்

ஞானப்பிரகாசியாரின் நல்வாழ்வைப் பின்பற்றும்
ஞானக்குழந்தைகள் நாம் நற்பேறு ஏற்று வாழ
மோனக்குரலெடுத்து-முப்பொழுதும் பாடுகின்றோம்
கான இசை எழுப்பி-கரம்கூப்பித்தொழுகின்றோம்!
அறுநூறு கூட்டங்கள்—அனுபவத்தில் பெற்றோம் நாம்
வெறுமனே நாம் கூடவில்லை வேற்றுமனம் கொள்ளவில்லை
பெறும்தியாய் சேவை செய்ய-பேறு பெற்றோம் இறையருளால்!
புனிதரின் வழி செல்ல-பூமியில் அமைப்புப்பெற்றோம்
கனிதரும் திராட்சையாக-கனிவுடன் அழைக்கப்பட்டோம்
இனிவரும் நாட்களிலும்-இனிதுடனே சேவைசெய்வோம்
கனிகொடுத்து களிப்பெய்தி-கவலையின்றி வாழ்ந்திடுவோம்!

—ப. போல் அமல்ராஜ்
மாதகல்.

## நினைவு அஞ்சலி

திரு. செபஸ்தியான்
லூக்காஸ் மடுத்தீன்

மண்ணகம்: 18-10-1954 விண்ணகம்: 28-11-1988

அன்பின் திருவுருவே!
பாசமுள்ள கணவராகத் தந்தையாக
மகனாக சகோதரராக வாழ்ந்தீரே!
கணப் பொழுதில் உமதுயிரை
எம்மை விட்டுப் பிரித்தெடுக்க
காலனவன் துணிந்தானே!
இறைவா! நீயும் இசைந்தாயோ!
தலைவா! துடிக்கின்றோம் உன் நினைவால்
வாடிநிற்கிறதே உன் குடும்பம்
நம்பமுடியவில்லை உன் மறைவை,
ஆனால் உணர்கின்றோம் — நீங்கள்
இல்லாது சோபைஇழந்து காணப்படும்
எம் இல்லத்தின் வெறுமையை

உமது ஆத்மா சாந்தியடைய
தினமும் பிராத்திக்கின்றோம்.

மனைவி, மகன், பெற்றோர்
மாமி சகோதரர், சகோதரிகள்
மச்சான்மார், மச்சாள்மார்
மக்கள், மருமக்கள்.

'றெஜீனா'
தலைமன்னார் A/1

## கலை நிலா.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

றத்தை ஏற்படுத்தும் கட்டுரை, கதை, நாடகங்களாகவும் அமைந்துள்ளன. பொதுவாக, '' திருமகனே தாலேலோ '' கிறிஸ்து பிறப்புவிழா காலத்திற்கான உளமாற்றத்தை ஏற்படுத்தும் விடயங்கள் அடங்கிய மலர் என்றே நாம் நம்புகின்றோம்.

நாம் வருகின்ற பாஸ்காத் திருநாள் காலத்தில் திருப்பாடுகளோடு ஒட்டிய கருத்துக்கள் அடங்கிய மலர்ஒன்றினை வெளியிட விருப்பம் கொண்டுள்ளோம்.

எழுத்தாளர்களின் ஆக்கங்கள் எம்மால் வரவேற்கப்படும். புதிய எழுத்தாளர்கள் நம்மால் ஊக்குவிக்கப்படுவார்கள் ஆக்கங்கள் தந்துதவ விரும்புவோர் 223, பிரதான வீதியில் அமைந்துள்ள நமது செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நம் தமிழர் கலைகாத்து
இறைமகன் யேசுக்கிறிஸ்துவை
இறைஞ்சுவோம்.

திரு அ. வ. டேமியன்சூரி

## நவாலியில்- 'ஒளிவிழா'வும், பரிசளிப்பும்

நவாலி சென். பீற்றேஸ் ஆலயப்பங்கைச் சேர்ந்த மறையாசிரியர் சங்கத்தின் அநுசரணையுடன், பக்திச்சபைகள், பங்கு மக்கள் ஒன்றிணைந்து நடாத்திய ஒளி விழாவும், பரிசளிப்பும் மேற்படி ஆலயமுன்றலில் 26.12.88 அன்று மாலை இடம்பெற்றன. முதலில் மறைக்கல்வி மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட பரீட்சை, வரவு ஒழுங்கு மதிப்பீடு ஆகியவற்றில் தகுதிபெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து ஒளிவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

சிறப்புரை வழங்கிய அருள் திரு. ஜெறோம் லெம்பேட் அடிகள், 'பாவ இருள் அகற்ற பாரினில் அவதரித்த பரமன் கிறிஸ்து உலகிற்கே ஒளியாயானார். அதனை விசுவசிக்கும் கிறிஸ்தவர்களாகிய நாமும் சமுதாயத்திற்கு ஒளியாக, முன்மாதிரியாக வாழ முயல வேண்டும்'எனக்குறிப்பிட்டார்

அருள்திரு. செபஸ்ரியன் அடிகள் தமது உரையில், எமக்கென்று ஒரு மீட்பர் பிறந்தார்-அவர் எம்மில் வாழுகின்றார்—எம்மை வழிநடத்துகின்றார். எத்தகைய இருள் எம்மைச் சூழ்ந்தாலும் எமக்கு நம்பிக்கையூட்டுவது 'கிறிஸ்துவின் ஒளி' ஒன்றுதான்'' என்று கூறினார்.

தொடர்ந்து இடம்பெற்ற 'இயேசு பிறப்பை' மையமாகக் கொண்ட பாடல்கள், நடனம், நாடகம், தாளலயம் ஆகிய இன்னோரன்ன நிகழ்ச்சிகள் பார்த்தவர் மனதைக்கவர்ந்தன

மறையாசிரியர் சங்கத்தலைவி செல்வி K.L. பேணடேற் நன்றி நவின்றார்—

நவாலியூர் சிறில் சுகந்தரா

## 5ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 14-04-1926 உதிர்வு: 03-01-1983

(ஆசிரியர்)

ம. சூசைப்பிள்ளை (J. P.)

தந்தாய் உமது அன்புப் பராமரிப்பில் இவரை நித்தியத்திற்கும் காத்தருளும்.

ஆமென்,

இவரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இளவாலை. A/4.

## 1-ம் வருட நினைவஞ்சலி



மத்தேஸ் அகினேஸ்

தோற்றம்: 19-1-1897 மறைவு: 19-12-1987

இரக்கம் மிகுந்த இறைவா, நீரே இவ்வுலகில் சகலமுமாயிருந்து எல்லாவற்றையும் நடப்பிக்கின்றீர். இவ்வுலகில் வாழ்ந்து உமது சித்தப்படி மரித்த உமது அடியாள் மத்தேஸ் அகினேஸ் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
றீற்றம்மா கோவிலடி
இளவாலை. A/2

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



றெபேக்கா நேசம்மா
அந்தோனிப்பிள்ளை

தோற்றம்: 28-09-1902 மறைவு: 12-12-1988

இவரின் ஆன்ம சாந்திக்காக 11-01-1989 புதன் கிழமை மாலை 5 மணிக்கு நாரந்தனை புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவவின் பிரிவால் துயருறும்:
அருள்செல்வி மேரிமாகிறேற் (மச்சாள்) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்,

நாரந்தனை. A/3.

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப் பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

# சமயங்களுக்கிடையிலான உரையாடலில் ஆசியாவின் முக்கியத்துவம்

பிற சமயங்களுடன் உரையாடல் நடத்துவதில் திருச்சபைக்கு அக்கறை இருக்குமானால், உலக சமயங்களின் பிறப்பிடமான ஆசியாவின் சமய யதார்த்தங்களையும், சமூக பொருளாதார கிளர்ச்சிகளையும் திறந்த மனத்துடன் அணுக வேண்டுமென சமயங்களுக்கிடையிலான உரையாடல் பற்றிய திருத்தந்தையின் ஆணைக் குழுவின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் பாங்கொக் நகரத்த 200 கிலோ மீற்றர் தெற்கேயுள்ள ஹுவா ஹின் சலேசிய ஞானொடுக்க இல்லமொன்றில் நடந்தது.

கிறிஸ்தவரல்லாதோருக்கான செயலகத்தின் தலைவரான கருதினால் பிரான்ஸிஸ் அரின்ஸ் மூன்றுபேர் தூதுக்குழுவுக்குத் தலைமை வகித்தார்.

இவர்கள் ஆசிய நாடுகளிலிருந்து வந்த 12 ஆலோசகருடன் ஆசிய நாடுகளில் சமயங்களுக்கிடையிலான உறவுகளை ஆராய்ந்தனர். உரையாடலுக்கு இன்னும் துணிவான முறையில் செயற்படவேண்டுமென்றும் நாளாந்த வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் பொதுநிலையினரின் ஈடுபாடு அவசியம் என்றும் இவர்கள் கருதினர்.

இந்து, பௌத்த சமுதாயங்களில் உரையாடலுக்கேற்ற நல்ல சூழ்நிலை இருப்பதாகவும் ஆனால் இஸ்லாமிய சமுதாயத்தில் அத்தகைய நிலை இல்லை எனவும், குறிப்பிடப்பட்டது.

ஆனால்பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழும் பங்களதேஷ், இந்தோனேசியா, ஆகிய நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும், சகோதரத்துவம் நிலவக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. உரையாடல், கலாசார மயமாக்குதல், மறையறிவித்தல் ஆகியன பற்றிய போதனைகளில் இன்னும் தெளிவு வேண்டும் என்றும் பங்குபற்றியோர் கருதினர்.

தெற்காசிய இறையியலாளருள் இருவரான பிதா டி. எஸ் அமலோற்பவதாஸ், பிதா. எஸ். ஜே. இம்மானுவேல் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்குத் துணைபுரிந்தனர்.

இந்தக் கூட்டத்தின் விளைவாக, இறையியல், ஆசிய மேய்ப்புப்பணி அனுபவம் ஆகியவற்றின் ஒளியில் சில குறிப்பிட்ட விடயங்களை ஆராய்வதற்குத் துணைபுரியக்கூடிய ஓர் ஆசிய சமய உரையாடல் நிறுவனத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

## ஏழைகளுக்கு கைகொடுத்த மாது

ஒரு காலத்தில் கர்நாடக மாநிலத்திலுள்ள பங்களூரில் ஒரு மதுபானக்கடை உரிமையாளராக இருந்த திருமதி வினிபிரட் ஜோசவ் தற்போது வேறொரு சூழலில் அதாவது ஏழைகள், நோயாளர் மத்தியில் வேலை செய்து வருகிறார். அதிக வருவாய்தந்த மதுபான விற்பனையை விட்டுவிட்டு ஏழைகள், சேரிவாசிகள், நோயாளர் நடுவில் அவர் செய்துவரும் பணிக்காக அவருக்கு ஒரு தேசிய விருதும், இரு மாநில விருதுகளும் கிடைத்துள்ளன.

73 வயதான இந்த விதவை குணம் அடைந்த தொழுநோயாளருக்காக வினி கொலனியில் 1330 குடிசைகள் அமைத்துள்ளார். வேறு மூன்று இடங்களிலும் அவர் குடியிருப்புகளை அமைத்துள்ளார்.

தொண்டையில் ஏற்பட்ட புற்று நோய் காரணமாக ஓதவாய் ஞாபகார்த்த புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது திருமதி ஜோசவ் தனது சக்கர நாற்காலியில் ஆஸ்பத்திரியைச் சுற்றிவந்தார். அங்குள்ள வசதிகள் திருப்திகரமாக இல்லாததால் அவர் இதுபற்றி பிரதமர் ராஜிவ் காந்திக்கு முறைப்பாடு கொடுத்தார்.

எழுபது வயதுக்கு மேலாகியும் ஒரு இளம் பெண்ணைப் போல சுறுசுறுப்பாக உழைத்து வருகிறார்.

## பெண் கடத்தல் அதிகரிப்பு

பீகார் மாநிலத்தில் இளம பெண்களைக் கடத்துவோர் பெரும்பாலும் கன்னியா மடங்களிலும், ஆங்கில மிஷன் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவியரையே கடத்துச் செல்வதாக பம்பாயிலிருந்து வெளிவரும் தினசரியான இந்தியன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

கடத்தல்கள் அதிகரித்து வருவதாகக் கூறும் இப்பத்திரிகை கடந்த ஒன்பது மாதங்களில் குறைந்த பட்சம் 333 யுவதிகள் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கிறது.

இரு வாரங்களுக்கு முன் புனித சூசையப்பர் மடத்திலிருந்து ஐந்து யுவதிகளைக் கடத்தியதாக ஒரு ரிக்ஷாக்காரன் கைது செய்யப்பட்டதாயும், இச்செய்தியறிக்கை கூறுகிறது.

கடத்தப்பட்டும், பெண்கள் ஐரோப்பாவுக்கோ அரபு நாடுகளுக்கோ அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது. பிறநோயாளருக்கு தமது அங்கங்களைத் தானம் செய்வதற்கும், அரபு நாடுகளில் வயது சென்றவர்களுக்கு மனைவியராகவும், விபசார விடுதிகளிலும், இவர்கள் உபயோகிக்கப்படுகின்றனர்

## கேரள அரசு பாடசாலை பற்றி மீண்டும் பரிசீலனை

திருச்சபையினதும் கிறிஸ்தவர்களினதும் எதிர்ப்பின் மத்தியில் கேரளத்தின் இடதுசாரி அரசு ஒரு கத்தோலிக்க பாடசாலையின் அரச அங்கீகாரத்தை நீக்குவது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யவிருக்கின்றது. திருவனந்தபுரத்திலுள்ள பரிசுத்த தேவதூதர் உயர்நிலைப்பள்ளி 10 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்த காரணத்தால் ஆனி 1989ற்குப் பின் அரச அங்கீகாரம் பெறமாட்டாது என செப்டெம்பர் 28-ம் திகதி வெளியான உத்தியோகபூர்வமான செய்தி கூறுகின்றது.

ஆனால் கல்வி அமைச்சின் காரியதரிசியான பாபு பவுல் தனது அரசின் இசைவையிட்டு மறுமன கருத்துத் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரம் ஆயரும், ஆயர் பேரவைத் தலைவருமான பேராயர் பெனடிக்ற் மார் கிறகோரியோஸ் இதனைக் கண்டனம் செய்துள்ளார்.

ஆயர் பேரவையின் துணைச் செயலாளரான பிதா சற்றாணிஜோ டயஸ் கேரள முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் இத்தீர்மானத்தை மீண்டும் பரிசீலனை செய்து பாடசாலை அதிகாரிகள் தமது நியாயங்களை எடுத்துக்கூற இடமளிக்க வேண்டுமென்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசாங்க ஒழுங்குகளில் கேட்கப்படும் தகுதிகளைப் பெறாதவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

100 ஆண்டு நிறைவு பெற்ற இப்பாடசாலை கார்மேல்சபைக் கன்னியரால் நடத்தப்படுகிறது. சுமார் 5500 மாணவர் இங்கு கல்வி பயிலுகின்றனர். அதன் பரீட்சைப் பெறுபேறுகளின் காரணமாக இது கேரளத்தின் அதிசிறந்த பாடசாலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இது போன்றே மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவுக்கு 100 கிலோ மீற்றர் தெற்கேயுள்ள ஹால்தி என்னும் இடத்தில் யேசு சபையினரால் நடத்தப்படும் ஒரு பாடசாலையில் இரண்டு தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்த காரணத்தால் மார்க்ஸியவாதிகளிடமிருந்து பிரச்சினை தோன்றியுள்ளது. 4000 மாணவர் கற்கும் இப்பாடசாலை மார்க்ஸியவாதிகளின அச்சுறுத்தலால் மூடப்படவேண்டியதாயிற்று.

அந் நகரிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களே இப்பாடசாலைக்கு நிதியுதவி அளித்து வருகின்றன. இந் நிறுவனங்களில் தொழில்புரிவோரின் பிள்ளைகளே இங்கு கல்வி கற்கின்றனர்,

பாடசாலை நிர்வாகத்துக்குத் துணைபுரியும் பொருட்டு இத் தொழிலாளர்கள் தமக்கென ஒரு தொழிற்சங்கம் அமைக்குமாறு பாடசாலை நிர்வாகத்தினர் ஊக்குவித்தும் அவர்கள் பிற மார்க்ஸிய தொழிற் சங்கங்களில் சேர்ந்தமையாலேயே பிரச்சினைகள் ஏற்பட்டன என்றும் கூறப்படுகிறது.

## தேசிய வார இதழுக்கு வரவேற்பு

சமூக – அரசியல் தொடர்பான ஒருவார இதழ் வெளியிடுவதற்கு நல்ல வரவேற்பு இருப்பதாக வார இதழ் குழுவின் செயலாளரான பிதா ஜோண் வள்ளமட்டம் கூறியுள்ளார்.

அவர் கூற்றுப்படி ஏறக்குறைய ரூ. 50,000 சேர்க்கப்பட்டுள்ளது. ஆயர் சிலரும் துறவற சபைச சிரேஷ்டர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள பல கத்தோலிக்க வெளியீடுகளும் வெளிநாட்டிலுள்ள சிலவும் இந்த ஆலோசனையை வரவேற்றுப் பிரசாரமும் செய்துள்ளன. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல பெரியார்கள் இம்முயற்சியைப் பாராட்டியுள்ளனர்.

## சிறுவர் இல்லத்துக்காக காணி அன்பளிப்பு

மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகிய அக்டோபர் 2ஆம் திகதி நடைபெற்ற வைபவமொன்றில் ஆசன்சோல் – துர்க்காபூர் அபிவிருத்தி அதிகாரசபையால் 1. 5 ஏக்கர் காணி அன்னை திரேசாவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

" அன்பும் பராமரிப்பும் அற்ற சிறுவருக்கு இது ஒரு அழகிய அன்பளிப்பு. அன்பின் மகிழ்ச்சியை தேவைப்படுவோருடன் பகிர்ந்துகொள்ள இது இங்குள்ள மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும்" என அன்னை திரேசா அத்தருணத்தில் குறிப்பிட்டார்.

இந்தக் கொடைக்கான ஒப்பந்தம அன்னை திரேசாவினாலும் அதிகார சபையின பிரதம அதிகாரியான திரு பிரபா தாஸினாலும் கைச்சாத்திடப்பட்டது.

## மரணத்தறுவாயில் நோயாளிகளை மதம்மாற்றுவது பற்றி எச்சரிக்கை

அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு மதபோதனை செய்யும் வைத்தியர்களைச் சிங்கப்பூர் அரசாங்கம் கடுமையாக எச்சரித்துள்ளது.

கடுமையாக நோயுற்றிருந்த சிலரை மதம்மாற்ற முயன்ற சில கிறிஸ்தவ வைத்தியர்களைப் பற்றிக் கிடைத்த முறையீட்டின் விளைவாக பதில் சுகாதார அமைச்சர் யியோ சியெள இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

'வைத்தியரின் பணி நோயாளிக்குச் சிறந்த சிகிச்சை அளிப்பதே தவிர மதபோதனை செய்வதல்ல' என அவர் கூறியுள்ளார்.

வைத்தியரின் செயல்பற்றிப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கடிதத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சிங்கப்பூர் பல்கலைக்கழக நூலகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில வைத்திய மாணவர் சிலர் கிறிஸ்தவ விசுவாசத்தில் அதிக பற்றுக்கொண்டிருப்பதால் அதைப் பரப்பும்படி உந்தப்படுகிறார்கள். கடுமையாக நோயுற்றிருப்பவர்பற்றி ஒருவரிடமிருந்து மற்றொருவர் அறிந்து கடைசி நேரத்தில் அவர்களை மனந்திருப்ப முயற்சிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

அங்குள்ள கத்தோலிக்க மாணவர் சங்கம் தனது அங்கத்தவர்கள் அத்தகைய மனந்திருப்புதலில் ஈடுபடுவதில்லை என அறிவித்துள்ளது இவர்கள் சில தீவிர மதப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது

## பிரதமருக்கு வித்யாஜோதியின் முறைப்பாடு

ராஜஸ்தானிலுள்ள ஸ்ரீ நாத்ஜி இந்து ஆலயத்தில் அக்டோபர் 3ஆம் திகதி சில ஹரிஜன பக்தர்கள் பொலிசார் அதிகாரிகள் முன்னிலையில் உயர் சாதியினரால் தாக்கப்பட்டதையிட்டு கலவரமுற்ற வித்தியா ஜோதி நிறுவனத்தின் ஆசிரியரும் மாணவரும் பிரதமர் ராஜிவ் காந்திக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்.

ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் அனுமதி அளித்ததை யடுத்து ஆலயத்துட் பிரவேசித்த ஹரிஜனங்களுக்கு இம் மகஜர் நீதி கோருகின்றது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்